உளூ இன்றி குர்ஆனைத் தொடலாமா?

ஆசிரியர்
மௌலவி அல்ஹாஜ் அல்ஹாபிழ்
அப்ஸலுல்உலமா
M. ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி M.A.

தலைவர்

சுன்னத் ஜமாஅத் ஐக்கியப் பேரவை

வெளியீடு
குப்ரா மஜீத் பதிப்பகம்
'மஸ்ஜித் முபாரக்'
16 பில் கிங்டன் ரோடு
அயனாவரம், சென்னை 23
9841111367

நூல் பெயர் : உளூ இன்றி குர்ஆனைத் தொடலாமா!

பக்கம் : 88

மொழி : தமிழ்

ஆசிரியர் : M.ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி M.A.,

முகவரி : மஸ்ஜித் முபாரக்

16- பில்கிங்டன் ரோடு,
அயனாவரம்,

சென்னை - 23.

98411 11367

முதல் பதிப்பு : டிஸம்பர் 2007

பிரதிகள் : 2000

இரண்டாம் பதிப்பு : மே, 2008

பிரதிகள் : 2000

விலை : ரூ. 20

அச்சு அமைப்பு : பஹீமிய்யா பப்ளிஷர்ஸ்

Type Setting By :
FAHEEMIYA PUBLISHERS
16-Railway Station Road,
Guduvancheri – 603 202
Cell : 984156 7213

சமர்ப்பணம்

என்னை ஈன்றெடுத்து
வளர்த்து ஆளாக்கிய
அருமைத் தந்தை ,
அன்புத் தாயார்
மற்றும்
இறை ஞானம் வழங்கிய
ஆன்மிக ஆசான்
ஆகியோருக்கு
இந்த நூல்
காணிக்கை

இந்நூல் உள்ளவை

* முன்னுரை
* இரு விளக்கவுரைகள்

    1. குர்ஆனைத் தொடுதல் மற்றும் ஓதுவதற்குரிய சட்டங்கள்.

    2. வஹ்ஹாபிகளின் வினாக்களுக்கு விடைகள்

* முடிவுரை
* பின் குறிப்புகள்
* ஒரு கேள்வி
* பகிரங்க சவால்

முன்னுரை

அன்பு இதயங்களே! அஸ்ஸலாமு அலைக்கும் மனிதனாகப் பிறந்தவனின் இலக்கு மறுமை வெற்றி. அதை அடைவதற்கு மிக அவசியமானவை இரண்டு.

1. இறைவனை வணங்குதல்
2. இறைநேசர்களை மதித்தல்

ஏறத்தாழ இருபத்தைந்து வருடங்களுக்கு முன் தமிழகத்தில் ஊடுருவிய வஹ்ஹாபிகள் அவ்விரண்டையும் சிதைக்க முனைப்புடன் செயல்பட்டனர்.

தராவீஹ் தொழுகை இல்லை
கழா தொழுகை இல்லை
மவ்-த் இல்லை
ஃபாதிஹா இல்லை
பராஅத் இல்லை

என்று வணக்க வழிபாடுகளைக் குறைக்க முயற்சிசெய்தனர்.

பின்னர், இறைத்தூதர்கள்
நபித்தோழர்கள்
மத்ஹப் இமாம்கள்
இறைநேசர்கள்
ஆ-ம் பெருந்தகைகள்

போன்றோரையெல்லாம் 'அவர்களும் மனிதர்கள் நாங்களும் மனிதர்கள்' எனக்கூறி அப்புனிதர்களின் கண்ணியத்தை சீர்குலைக்க களம் இறங்கினர்.

அதன் வரிசையில் குர்ஆனின் மாண்பையும் புனிதத்தையும் குறைக்கும் வகையில் குர்ஆனை சுத்தமில்லாமல் தொடலாம் என்ற நச்சுக்கருத்தை விதைக்க ஆரம்பித்தனர். அவர்களின் எந்த முயற்சியையும் ப-க்கவிடாமல் இஸ்லாமியர்களை

இறைவன் பாதுகாத்துவிட்டான். அல்ஹம்து-ல்லாஹ்.

இல்லாத பொல்லாத கருத்துக்களை குர்ஆன்-ஹதீஃத் பெயரில் கூறிவரும் வஹ்ஹாபி புரோகிதர்களை இஸ்லாமிய சமூகத்திற்கு அடையாளம் காட்டவும், குர்ஆனைத் தொடுவதற்கு தூய்மை அவசியம் என்பதை குர்ஆன்-ஹதீஃத் வெளிச்சத்தில் விளக்கிடவும் இச்சிறுநூலை இறையருளால் எழுதினேன்.

இந்நூ-ல் குர்ஆன் வசனங்கள், நபி மொழிகள், நபித்தோழர்களின் கூற்றுகள் மற்றும் இமாம்களின் கருத்துக்களை சான்றுகளாகக் காட்டியுள்ளேன். மேலும், வஹ்ஹாபிசத்திற்கு அடிகோ-ய வழிகேடர்தான் இப்னுதைமியா என்றாலும் அவரது கருத்துகளையும் ஆங்காங்கே கொண்டு வந்துள்ளேன். அதற்குக்காரணி வஹ்ஹாபிச முல்லாக்களால் மதிக்கப்படுகின்ற இப்னு தைமியாவின் கருத்தும் இதுவேதான் என்பதை திசைமாறிப்போன இளைஞர்களுக்கு உணர்த்து வதற்காகத்தான்.

இந்நூலை உருவாக்க வாய்ப்பையும் அதற்குண்டான வல்லமையையும் எனக்கு வழங்கிய வல்ல அல்லாஹ்விற்கு அனைத்துப் புகழையும் சேர்க்கிறேன்.

மேலும் இதனை அச்சமைத்து தந்த ஃபஹீமிய்யா பப்ளிஷர்ஸ் நிறுவனத்தாருக்கும் எமது இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வஸ்ஸலாம்.

உங்கள் அன்பன்

M. ஷைகு அப்துல்லாஹ் ஜமா-

சென்னை.
1-12-2007

விளக்கவுரை-1

குர்ஆனைத் தொடக்கூடாத நிலைகள்-

குர்ஆனைத் தொடக்கூடியவர் சிறுதொடக்கு மற்றும் பெருந்தொடக்கி-ருந்து தூய்மையானவராக இருக்க வேண்டும். அதாவது உளூ இல்லாதவர், குளிப்பு கடமையானவர், மாதவிடாய் பெண்கள், மற்றும் பிள்ளைப் பேறு உதிர போக்குள்ள பெண்கள் ஆகியோர் இறைவேதம் குர்ஆனைத் தொடக்கூடாது.

இவ்வாறு கூறிய சஹாபா பெருமக்கள்-

1.அ- ர-யல்லாஹு அன்ஹு

2.அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் ர-யல்லாஹு அன்ஹு

3.ச்ீது இப்னு அபீ வக்காஸ் ர-யல்லாஹு அன்ஹு

4. அப்துல்லாஹ் இப்னு உமர் ர-யல்லாஹு அன்ஹு

5.சயீது இப்னு ஜைத் ர-யல்லாஹு அன்ஹு

6.சல்மானுல் ீபாரிஸீ ர-யல்லாஹு அன்ஹு

இதே கருத்தை கூறிய தாபிஈன்கள்

1. அதாவு இப்னு அபீ ரபாஹ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி

2.இப்னு ஷிஹாப் ஜுஹ்ரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி

3.ஹஸன் பசரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி
4.தாவூஸ் இப்னு கய்சான் ரஹ்மத்துல்லாஹி அலைஹி
5.ஸா-ம் இப்னு அப்தில்லாஹ் இப்னி உமர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி
6.நக்யீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி
7.இப்னு முசய்யப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி
8.உர்வா இப்னு ஜுபைர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி
9.காசிம் இப்னு முஹம்மத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி
10. காரிஜா இப்னு ஜைத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி
11.அபூபக்கர் இப்னு அப்திர்ரஹ்மான் ரஹ்மத் துல்லாஹி அலைஹி
12. சுலைமான் இப்னு யஸார் ரஹ்மத்துல்லாஹி அலைஹி
13. உபைதுல்லாஹ் இப்னு அப்தில்லாஹ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி 1*

இமாம்கள் :

ஹனபீ(2*), மா-கீ(3*), ஷாபிஈ(4*), ஹன்பலீ (5*)

---

*1 இமாம் பைஹகீ அவர்களுக்குரிய மஃரிஃபதுஸ் ஸுனனி வல் ஆஃதார் 1/185

*இமாம் பைஹகீ அவர்களுக்குரிய சுனனுல் குப்ரா 1/88 இப்னுல் கய்யிம் அவர்களுக்குரிய இஃலாமுல் மூகியீன் 1/23

*2. ஹிதாயா 1/31 மஜ்மவுல் அன்ஹுர் 1/25 அல்பஹ்ருர் ராயிக் 1/211

*3. மஊனா 1/160 அக்துல் ஜவாஹிர் 1/62

*4. முஹஃத்தப் 1/32 ரவ்ழதுத்தா-பீன் 1/190 முங்னில் முஹ்தாஜ் 1/36

*5. முக்னிஃ 1/56 முன்தஹல் இராதாத் 1/27 அர்ரவ்ழுல் முரப்பஃ 1/26

ஆகிய நான்கு மத்ஹபுகளைச் சார்ந்த போற்று தலுக்குரிய இமாம்களும் இக்கருத்தையே வ-யுறுத் தியுள்ளார்கள்.

****

பரிசுத்தமானவர்கள்தான் குர்ஆனைத் தொட வேண்டுமென்பதற்கு அடிப்படை ஆதாரங்கள் மூன்று

1. இறைமறை வேதம் அல்குர்ஆன்

2. இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொன்மொழிகளான ஹதீத்

3. நபித் தோழர்களின் ஏகோபித்த முடிவான இஜ்மா

لَا يَمَسُّهُ إِلَّا الْمُطَهَّرُونَ (٧٩)

குர்ஆன் :

இறைவன் கூறினான் :

தூய்மையானவர்களைத் தவிர (வேறெவரும்) குர்ஆனைத் தொட மாட்டார்கள்.

(அல்குர்ஆன் 56-79)

இச்செய்தியின் மூலம் இறைவன் குர்ஆனின் மாண்பை வெளிப்படுத்துகிறான். தூய்மையானவர்கள் தான் என்று கூறி ஒரு வரைமுறையை இறைவன் விதித்துவிட்டதால் மற்றவர்கள் குர்ஆனைத் தொடக்கூடாது என்ற அழுத்தமான அர்த்தம்

இவ்வசனத்தில் உள்ளடங்கியுள்ளது.

நூல்-ீதகீரா 1-238 ஆசிரியர்- கர்ராீபீ

மனிதர்களில் தூய்மையானவர்கள் என்பதன் பொருள் :

★ஷிர்க் எனும் இணைவைப்பு, குீப்ர் எனும் இறை மறுப்பு இவ்விரண்டை விட்டும் நீங்கி உளத்தூய்மை யுடன் இருப்போர்.

★புலன்களுக்குத் தெரிகின்ற நஜீஸ் எனும் அசுத்தத்தை விட்டும் உடல் தூய்மையாக இருப்போர்.

★ஹதீத் எனும் சிறுதொடக்கு மற்றும் பெருந் தொடக்கைவிட்டும் நீங்கியிருப்போர்.

மேற்கண்ட வசனத்திலுள்ள வாசகம் வெளித் தோற்றத்தில் செய்தி வடிவில் அமைந்திருந்தாலும் கட்டளை வாக்கியமாகவே இங்கே கருதப்படும்.

நூற்கள்- தீப்ஸீர் பங்வீ 5-301

தீப்ஸீர் இப்னு கீதீர் 4-299

ஹதீீத் ١.

عَنْ حَكِيْمِ بْنِ حِزَامٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ : لَمَّا بَعَثَنِي رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اِلَى الْيَمَنِ قَالَ : لَاتَمَسَّ الْقُرْآنَ اِلَّا وَاَنْتَ طَاهِرٌ

رواه الحاكم في المسدرك وقال : صحيح الاسناد ووافقه الذهبي. ورواه الدار قطني في سننه والطبراني في المعجم الكبير

1. ஹகீம் இப்னு ஹிஜாம் ர-யல்லாஹுஅன்ஹு அறிவிக்கிறார்கள் :

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னை யமன் நாட்டிற்கு அனுப்பிய சமயம் என்னிடம் கூறினார்கள். நீங்கள் தூய்மையாக இருக்கும் போதுதான் குர்ஆனைத் தொடவேண்டும்.

நூற்கள் : ஹாகிம்- எண் : 6066,
தாரகுத்னீ- எண் : 386,
தப்ரானி(கபீர்)- எண் : 3067

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசை நம்பகத்தன்மை வாய்ந்ததென்று இமாம் ஹாகிம் அவர்கள் தெரிவிக்கிறார்கள். மேலும் இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர் அழகியதென்று இமாம் ஹாஜிம் கூறுகின்ற கருத்தை இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி தனது தல்கீஸ் ஹபீர் என்ற நூ-ல் பதிவு செய்துள்ளார்கள். தல்கீஸ் ஹபீர் 1-131

٢. عَنْ عَبْدِ اللّٰهُ بْنِ عُمَرَ رَضِيَ اللّٰهُ عَنْهُ قال : قَالَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ : لَايَمَسُّ الْقُرْآنَ اِلَّاطَاهِرٌ

رواه الدارقطني في سننه والطبرانى فى الكبير والصغير والبيهقي في السنن الكبرى

2. இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மொழிந்தார்கள்:

பரிசுத்தமானவர் தான் குர்ஆனைத் தொட

வேண்டும்.

அறிவிப்பாளர்- அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு

நூற்கள்: தாரகுத்னீ- எண்: 383,
பைஹகீ /377,
தப்ரானி (ஸகீர்)- எண்: 1160,
தப்ரானி (கபீர்)- எண்: 13049

இந்த ஹதீதின் அறிவிப்பாளர்கள் நம்பகமானவர்கள்.
நூல் : மஜ்மவு ஜவாயித் 1-276

٣.
عَنْ عُثْمَانَ بْنِ اَبِى الْعَاصِ قَالَ: وَفَدْنَا عَلٰى رَسُوْلِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ فَوَجَدُوْنِي اَفْضَلَهُمْ اَخْذًا لِلْقُرآنِ وَقَدْ فَضَلْتُهُمْ بِسُوْرَةِ الْبَقَرَةِ فَقَالَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ : قَدْ اَمَّرْتُكَ عَلٰى اَصْحَابِكَ وَاَنْتَ اَصْغَرُهُمْ وَلَاتَمَسَّ الْقُرْآنَ اِلَّا وَاَنْتَ طَاهِرٌ (رواه الطبراني فى الكبير)

3. உத்மான் இப்னு அபில் ஆஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்:

நாங்கள் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை சந்தித்தோம். எங்களில் குர்ஆனை நன்கு ஓதக்கூடியவனாக நானிருந்தேன். இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னிடம் சொன்னார்கள்:

நீர் சிறுவராக இருப்பினும் உம் கூட்டத்தினருக்கு தலைவராக உம்மை நியமிக்கிறேன்.நீர் தூய்மை யானவராக இருக்கும் போது தான் குர்ஆனைத் தொடவேண்டும்.

நூல்: தப்ரானி (கபீர்)- எண்: 8255

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் வருகின்ற இஸ்மாயில் இப்னு ராஃபிஃ என்பவர் பலவீனமானவர் என யஹ்யா இப்னு மயீன் தெரிவித்தாலும் இமாம் புகாரி அவர்கள் அவரை நம்பகமானவர் என உரைக்கிறார்கள்.

நூல்: மஜ்மவு ஜவாயித் 1 - 277

.٤

عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ اَبِيْ بَكْرِ بْنِ مُحَمَّدِ بْنِ عَمْرِو بْنِ حَزْمٍ عَنْ اَبِيْهِ عَنْ جَدِّهِ قَالَ: كَانَ فِيْ كِتَابِ النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ لِعَمْرِوبْنِ حَزْمٍ : لَايَمَسُّ الْقُرْآنَ اِلَّا عَلٰى طُهْرٍ.

رواه مالك وابن حبان والدارمي والبيهقي والدارقطني

4. இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அம்ரு இப்னு ஹஜ்ம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு எழுதப்பட்டு இருந்தது: 'தூய்மையான நிலையில் தான் குர்ஆனைத் தொட வேண்டும்.'

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அபீபக்ர் ரலியல்லாஹு அன்ஹு

நூற்கள்: முஅத்தா-எண்: 466,

தாரமீ- எண்: 2195,
பைஹகீ - எண்: 376,
தாரகுத்னீ - எண்: 385,
இப்னுஹிப்பான்- எண்: 6703.

இமாம் தாரகுத்னீ அவர்களின் கூற்று:.

இதன் அறிவிப்பாளர்கள் நம்பகத்தன்மை யுள்ளவர்கள்.

இமாம் பஙவீ அவர்களின் கூற்று:-

قَالَ الْبَغَوِي سَمِعْتُ اَحْمَدَ بْنَ حَنْبَلٍ وَسُئِلَ عَنْ هٰذَا الْحَدِيْثِ فَقَالَ : اَرْجُوْ اَنْ يَكُوْنَ صَحِيْحًا

وَقَالَ اَيْضًا: لَااَشُكُّ اَنَّ رَسُوْلَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ كَتَبَهُ.

இந்த ஹதீஃதின் நிலைப்பற்றி இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களிடம் வினவப்பட்ட போது, இது ஆதாரபூர்வமானது என்றே கருதுகிறேன் என பதிலளித்த இமாம் அவர்கள் மேலும் கூறினார்கள்:

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இதை எழுதினார்கள் என்பதில் எனக்கு எந்த ஐயமும் இல்லை.

நூற்கள்- திப்யான் 1-409, இர்வாவுல் ஙலீல் 1-161

.இமாம் யஃகூப் இப்னு சுப்யான் அவர்களின் கூற்று :-

قَالَ يَعْقُوْبُ بْنُ سُفْيَانَ : لَااَعْلَمُ كِتَابًا اَصَحَّ مِنْ هٰذَا

الْكِتَابِ فَإِنَّ أَصْحَابَ رَسُوْلِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ
وَالتَّابِعِيْنَ يَرْجِعُوْنَ إِلَيْهِ وَيَدَعُوْنَ رَأْيَهُمْ

எனக்கு தெரிந்து இதைவிட சிறந்த கடிதம் எதுவுமில்லை. ஏனென்றால், நபித்தோழர்களும் மற்றும் தாபியீன்களும் தங்களது சொந்த யூகங்களைப் புறந்தள்ளிவிட்டு குர்ஆனைத் தொடுவதற்கு சுத்தம் அவசியம் என்ற நிலைப்பாட்டிலேயே இருந்தனர்,

நூல் : திப்யான் ஃபீ அக்ஸாமில் குர்ஆன்–பக்கம் :144

இமாம் ஹாகிம் அவர்களின் கூற்று:-

قَالَ الْحَاكِمُ : قَدْشَهِدَ عُمَرُ بْنُ عَبْدِ الْعَزِيْزِ وَالزُّهْرِيُّ لِهٰذَا
الْكِتَابِ بِالصِّحَّةِ
الإسناد الواحد المتصل

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுதிய இக்கடிதம் ஆதாரபூர்வமானது என்று உமர் இப்னு அப்தில் அஜீஸ் அவர்களும் ஜுஹ்ரீ அவர்களும் சாட்சி பகர்ந்துள்ளனர்.

நூல்: ஹாகிம்: 1–397

இமாம் இப்னு அப்திர் பர்ர் அவர்களின் கூற்று:-

قَالَ الْإِمَامُ ابْنُ عَبْدِ الْبَرِّ: وَكِتَابُ عَمْرِو بْنِ حَزْمٍ هٰذَا تَلَقَّاهُ
الْعُلَمَاءُ بِالْقَبُوْلِ وَالْعَمَلِ وَهُوَ عِنْدَهُمْ أَشْهَرُ وَأَظْهَرُ مِنَ

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்

அவர்களால் அம்ரு இப்னு ஹஜ்ம் அவர்களுக்கு எழுதப்பட்ட இக்கடிதத்தை இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் ஏற்று அமல் படுத்தியுள்ளார்கள். மேலும், தொடர் வரிசையுள்ள ஒரு வழித் தொடர் ஹதீஸைவிட கடிதம் சம்பந்தப்பட்ட இந்த ஹதீஸ் பிரபல்யமடைந்ததாகவும் மிகவும் ஏற்கத்தக்கதாகவும் அவ்வறிஞர்களிடம் கருதப்பட்டது.

நூல்: இஸ்திஸ்கார் 8-10

சுன்னத் ஜமாஅத் கொள்கைக்கு முரண்பட்ட இப்னு தைமியாவின் கூற்று:-

قَالَ ابْنُ تَيْمِيَةَ : وَهُوَ كِتَابٌ مَشْهُورٌ عِنْدَ أَهْلِ الْعِلْمِ.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுதிய இக்கடிதம் இஸ்லாமிய மார்க்க அறிஞர்களிடம் பிரபல்யமுள்ளதாகும்.

நூல்: ஷரஹுல் உம்தா 1-382

குர்ஆன் ஓதக்கூடாத நிலைகள்:-

❖ குளிப்பு கடமையாளவர்கள் - ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் - குர்ஆனை ஓதக் கூடாது.

❖ மாதவிடாய் பெண்கள் குர்ஆன் ஓதக்கூடாது.

❖ பேறுகால உதிரப் போக்குள்ள பெண்கள் குர்ஆன் ஓதக்கூடாது.

❖ உளூ இல்லாதவர்கள் குர்ஆனைத் தொடாமல் ஓதுவது கூடும்.

சான்றுகள்-

١. عَنْ ابْنِ عُمَرَ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : لَا تَقْرَأِ الْحَائِضُ وَلَا الْجُنُبُ شَيْئًا مِنَ الْقُرْآنِ

(رواه الترمذي والبيهقي في السنن الكبرى وابن عساكر والدار قطني وابن ماجه)

1. **இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:-**

மாதவிடாய் பெண்ணும் குளிப்பு கடமையானவரும் குர்ஆனில் எப்பகுதியையும் ஓதகூடாது.

அறிவிப்பாளர்- இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு

நூற்கள் : திர்மிதீ. - எண்: 121 ,
பைஹகீ - எண்: 1351,
இப்னு அசாகிர் - எண்: 2764,
தார குத்னீ - எண்: 369,
இப்னு மாஜா - எண்: 588

٢.
عَنْ عَلِيٍّ قَالَ: كَانَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يُقْرِؤُنَا الْقُرْآنَ عَلٰى كُلِّ حَالٍ مَالَمْ يَكُنْ جُنُبًا رواه الترمذي قال ابوعيسى : حديث عليّ حديث حسن صحيح وبه قال غير واحد من اهل العلم اصحاب النبيﷺ والتابعين قالوا يَقْرَأُ الرَّجُلُ الْقُرْآنَ عَلٰى غَيْرِوُضُوْءٍ وَلَا يَقْرَأُ فِي الْمُصْحَفِ اِلَّاوَهُوَ طَاهِرٌوَبِهِ يقول سفيان الثوري والشافعى واحمدواسحق.

2. இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எல்லா நேரங்களிலும் எங்களுக்கு குர்ஆனை ஓதிக்காட்டுவார்கள். ஆனால் குளிப்பு கடமையான நிலையில் ஓதிக் காண்பிக்க மாட்டார்கள்.

அறிவிப்பாளர் - அலீ ரலியல்லாஹு அன்ஹு
நூல்: திர்மிதீ-எண்: 136

இந்த ஹதீஸை பதிவு செய்த இமாம் திர்மிதீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அதே நூலில் கூறுகிறார்கள் :

அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்ற இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமான அழகிய (ஸஹீஹ் - ஹஸன்) ஹதீஸாகும்.

நபித்தோழர்களும் தாபியீன்களும் இக்கருத் தையே கூறியுள்ளனர். அதாவது ஒருவன் உளூ

இல்லாமல் குர்ஆன் ஓதலாம். ஆனால் , குர்ஆனைத் தொட்டு ஓதக்கூடியவனுக்கு உளூ அவசியம். இமாம் சுப்யான் ஸவ்ரீ, இமாம் ஷாபீஈ, இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் மற்றும் இமாம் இஸ்ஹாக் ரஹ்மதுல்லாஹி அலைஹிம் ஆகியோரும் இக்கருத்தையே கூறியுள்ளனர்.

.٣

عَنْ عَلِيٍّ قَالَ: كَانَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقْضِيْ الْحَاجَةَ وَيَقْرَأُ الْقُرْآنَ وَيَأْكُلُ اللَّحْمَ وَلَمْ يَكُنْ يَحْجُبُهُ عَنْ قِرَاءتِهِ شَيْئٌ لَيْسَ الْجَنَابَةُ

رواه الحاكم وابو يعلى والطبراني في الاوسط والدارقطني وابن حبان وابن عساكر وابن خزيمة وابن ماجة وابو داؤد والنسائي وابن ابي شيبة.

3. இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கழிவறை சென்று வந்த பின்னால் குர்ஆன் ஓதுவார்கள். மாமிசம் உண்பார்கள், அவர்கள் குர்ஆன் ஓதுவதிலிருந்து தடுப்பது குளிப்பு கடமை என்ற நிலை மட்டுமே.

அறிவிப்பாளர் - அலி ரலியல்லாஹு அன்ஹு

நூல்: ஹாகிம் - எண்: 497,
அபூயஃலா - எண்: 514,
தப்ரானி (அவ்சத்) - எண்: 6873,
தார குத்னீ -எண்: 376,
இப்னுஹிப்பான் - எண்: 806,

இப்னு அசாகிர்- எண்: 2709,
இப்னுகுஜைமா- எண்: 215,
இப்னு மாஜா- எண்: 587,
நசாயீ - எண்: 265,
அபூதாவூத் - எண்: 198,
இப்னு அபீஷைபா- எண்: 1035.

இமாம் திர்மிதீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களும் இமாம் இப்னு ஹிப்பான் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களும் இந்த ஹதீத் ஆதாரபூர்வமானது என பகர்ந்துள்ளனர்.

இமாம் அல்ஹாபிழ் இப்னு ஹஜர் ரஹ்மத் துல்லாஹி அலைஹி சொல்கிறார்கள்:-

قال الحافظ ابن حجر: وَضَعَّفَ بَعْضُهُمْ بَعْضَ رُوَاتِهِ وَالْحَقُّ اَنَّهُ مِنْ قَبِيلِ الْحَسَنِ يَصْلُحُ لِلْحُجَّةِ

(فتح البارى : ٤٠٨/١ ، تلخيض الحبير: ١٤٧/١)

இந்த ஹதீதின் சில அறிவிப்பாளர்களை சில இமாம்கள் பலவீனப்படுத்தியுள்ளனர். ஆனால், உண்மை என்னவெனில் இந்த ஹதீத் ஹஸன் அழகியது என்ற வகையைச் சார்ந்ததாகும். சான்றாக எடுத்துக் கொள்வதற்குரிய தகுதியும் இந்த ஹதீஃதுக்குள்ளது.

நூல்: ஃபத்ஹுல்பாரி 1-408
தல்கீசுல்ஹபீர் 1-147

٤.
عَنْ عَلِيٍّ اَنَّهُ اُتِيَ بِوَضُوْءٍ فَتَوَضَّأَ وُضُوْءَهُ لِلصَّلَاةِ ثُمَّ قَالَ :

هٰكَذَا رَأَيْتُ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ تَوَضَّأَ ثُمَّ قَرَأَ شَيْأً مِنَ الْقُرْآنِ ثُمَّ قَالَ : هٰذَا لِمَنْ لَيْسَ بِجُنُبٍ فَأَمَّا الْجُنُبُ فَلَا وَلَا آيَةً (رواه احمد)

4. அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு உளூ செய்யும் தண்ணீர் கொண்டு வரப்பட்டது. தொழுகைக்கு உளூ செய்வதுபோல் உளூ செய்துவிட்டு கூறினார்கள்:

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உளூ செய்யும் போது இவ்வாறே நான் பார்த்தேன்.

பிறகு இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், குர்ஆனில் சில வசனங்கள் ஓதினார்கள். பிறகு கூறினார்கள்:

குளிப்பு கடமையில்லாதவருக்கு குர்ஆன் ஓதுவது கூடும். ஆனால் குளிப்பு கடமையானவர் ஒரு வசனம் கூட ஓதக் கூடாது.

நூல்: அஹ்மத்- எண்: 830

عَنْ عَلِيٍّ قَالَ نَهَانِي رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ ... القراءة وأنا جنب (رواه الطبراني في المعجم الأوسط)

٥.

5. அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்:-

நான் குளிப்பு கடமையான நிலையில் இருக்கும்

போது குர்ஆன் ஓதக்கூடாதென்று இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் என்னைத் தடுத்தார்கள்.

நூல்: தப்ரானி (அவ்ஸத்)- எண்: 2407

٦.
عَنْ عَبْدِاللّٰهِ بْنِ رَوَاحَةَ قَالَ: نَهَانَا رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اَنْ يَّقْرَأَ اَحَدُنَا الْقُرْآنَ وَهُوَ جُنُبٌ (رواه الدار قطني . اسناده صالح وابن عساكر)

6. குளிப்பு கடமையான நிலையில் எவரும் குர்ஆனை ஓதக்கூடாது என இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தடுத்துள்ளார்கள்.

அறிவிப்பாளர் - அப்துல்லாஹ் இப்னு ரவாஹா ர-யல்லாஹு அன்ஹு

நூற்கள்: தார குத்னீ- எண்: 378,
இப்னு அசாகிர்- எண்: 10784.

٧.
عَنْ جَابِرٍ قَالَ: قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ لَاتَقْرَأِ الْحَائِضُ وَلَا النُّفَسَاءُ مِنَ الْقُرْآنِ شَيْأً (رواه الدارقطني)

7. இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

மாதவிடாய் பெண்களும் பிள்ளைப் பேறு

காலத்தின் உதிரப் போக்குள்ள பெண்களும் குர்ஆனில் எப்பகுதியையும் ஓதக்கூடாது.

அறிவிப்பாளர் - ஜாபிர் ர-யல்லாஹு அன்ஹு
நூல்: தாரகுத்னீ-எண்: 1652

٨. عَنْ عَلِيٍّ قَالَ قَرَأَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ بَعْدَ مَاأَحْدَثَ قَبْلَ اَنْ يَّمَسَّ مَاءً (احمد . ٦٦٨)

8. **சிறு தொடக்குள்ள நிலையில் உளூ செய்வதற்கு முன்னால் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குர்ஆன் ஓதினார்கள்.**

அறிவிப்பாளர் - அ- ர-யல்லாஹு அன்ஹு
நூல் - அஹ்மத் எண்-668

மேற்கூறப்பட்ட ஹதீஸ்த்களி-ருந்து நாம் தெரிந்து கொண்டவை:

❖குளிப்பு கடமையான பிறகு குளிப்பதற்கு முன்னால் குர்ஆனைத் தொடவும் கூடாது, ஓதவும் கூடாது. இது ஆண்கள் பெண்கள் இருதரப்பினருக்கும் பொருந்தும்.

❖மாதவிடாய் பெண்கள் குர்ஆன் ஓதவும் கூடாது, தொடவும் கூடாது.

❖குழந்தையை ஈன்றெடுத்த பின் ஏற்படும் உதிரப் போக்குள்ள பெண்கள் குர்ஆன் ஓதவும் கூடாது. தொடவும் கூடாது.

❖உளூ இல்லாதவர்கள் குர்ஆன் ஓதுவது கூடும்.

ஆனால் குர்ஆனைத் தொடக்கூடாது. இச்சட்டம் ஆண்கள் பெண்கள் இருதரப்பினருக்கும் உரியது.

இஜ்மாவு

இறைமறை வேதம் அல்குர்ஆனை சுத்தமில்லாமல் தொடக்கூடாது என்பதில் அனைத்து நபித் தோழர்களும் ஒருமித்த கருத்துடையவர்களாக இருந்துள்ளார்கள். தூய்மையில்லாமல் குர்ஆனைத் தொடலாம் என்ற மாற்றுக் கருத்தை ஒரு நபித் தோழர் கூட கூறியதில்லை என்பதும் இங்கே குறிப்பிடத் தக்கது . இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலும் அதன் பின்னரும் நபித் தோழர் மத்தியில் இக்கருத்து தான் நிலவி வந்ததென்பதற்கு எண்ணற்ற சான்றுகள் உள்ளன.

1. (இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன்) உமர் ர-யல்லாஹு அன்ஹு அவர்கள் தனது சகோதரியின் இல்லத்திற்கு வருகை தந்த போது குர்ஆன் ஓதப்படும் ஓசையை கேட்டார்கள். பிறகு தனது சகோதரியிடம் கேட்டார்கள்.-

فَقَالَ عُمَرُ: اَعْطُوْنِيَ الْكِتَابَ الَّذِي عِنْدَكُمْ اَقْرَأُهُ

உங்களிடம் உள்ள குர்ஆனை என்னிடம் கொடுங்கள்! நான் ஓத வேண்டும்.

சகோதரி கூறினார்கள்:-

فَقَالَتْ لَهُ اُخْتُهُ : اِنَّكَ رِجْسٌ وَلَا يَمَسُّهُ اِلَّا الْمُطَهَّرُوْنَ فَقُمْ وَاغْتَسِلْ اَوْ تَوَضَّأْ

நீங்கள் அசுத்தத்தில் உள்ளீர்கள். இக்குர்ஆனை சுத்தமானவர்கள் தான் தொட வேண்டும். ஆகவே, எழுந்து குளித்து விட்டு அல்லது உளூ செய்துவிட்டு வாருங்கள்!

فَقَامَ عُمَرُ فَتَوَضَّأَ ثُمَّ اَخَذَ الْكِتَابَ فَقَرَأَ طٰهٰ

(رواه الدار قطني والبيهقي في دلائل النبوة)

உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் எழுந்து சென்று உளூ செய்துவிட்டு குர்ஆனை எடுத்தார்கள். தாஹா எனும் அத்தியாயத்தை ஓதினார்கள்.

அறிவிப்பாளர் - அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு

நூற்கள்: பைஹகீ (தலாயிலுன்னுபுவ்வா)- எண்: 546
தாரகுத்னீ - எண்: 451

2.

عَنْ عَبْدِ الرَّحْمٰنِ بْنِ يَزِيْدَ قَالَ : كُنَّا مَعَ سَلْمَانَ فِيْ سَفَرٍ فَقَضٰى حَاجَتَهُ ثُمَّ رَجَعَ فَقُلْنَا لَهُ : تَوَضَّأْ يَااَبَاعَبْدِاللّٰهِ لَعَلَّنَا اَنْ نَسْأَلَكَ عَنْ آيٍ مِنَ الْقُرْآن قَالَ: فَاسْأَلُوْا فَاِنِّىْ لَااَمَسُّهُ اِنَّهُ لَايَمَسُّهُ اِلَّا الْمُطَهَّرُوْنَ قَالَ فَسَأَلْنَاهُ فَقَرَأَعَلَيْنَا قَبْلَ اَنْ يَتَوَضَّأَ

(رواه ابن ابي شيبة والبيهقى فى السنن الكبرى)

அப்துல் ரஹ்மான் இப்னு யஜீத் ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்:

ஸல்மான் (ஃபார்ஸி) ரழியல்லாஹு அன்ஹு

அவர்களுடன் ஒரு பயணத் தி-ருந்தோம்.அவர்கள் கழிவறை சென்று வந்தார்கள். அவர்களிடம் நாங்கள் கூறினோம். நீங்கள் உளூ செய்து கொள்ளுங்கள். நாங்கள் குர்ஆனில் சில வசனங்கள் பற்றி உங்களிடம் கேட்க விரும்புகிறோம்.

ஸல்மான்(ஃபார்சி) ர-யல்லாஹு அன்ஹு அவர்கள் எங்களைப் பார்த்து சொன்னார்கள்;-

என்னிடம் கேளுங்கள்! நான் குர்ஆனைத் தொடப் போவதில்லையே. குர்ஆனைத் தொடுவதற்குத்தான் தூய்மை அவசியம்.

பிறகு அவர்களிடம் (சில கேள்விகள்) கேட்டோம், அவர்கள் உளூ செய்வதற்கு முன்பாக சில வசனங்களை எங்களுக்கு ஓதிக் காண்பித்தார்கள்.

நூற்கள்: இப்னு அபீ ஷைபா- எண்: 1100,
பைஹகீ- எண்: 416

இமாம் பைஹகீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிடுகிறார்கள்:

தூய்மையானவர்கள் தான் குர்ஆனைத் தொட வேண்டும் என்ற இறைமறை வசனத்திற்கு ஸல்மான் ஃபார்சி ர-யல்லாஹு அன்ஹு அவர்களின் கூற்று விளக்கமாக அமைந்துள்ளது. உமர் ர-யல்லாஹு அன்ஹு அவர்களுக்கு அவர்களின் சகோதரி கூறியதும் இதை உறுதிப்படுத்துகிறது.

நூல்- மஃரிஃபதுஸ்ஸுனன் வல் ஆஃதார் 1-185.

சுன்னத் வல் ஜமாஅத்தைச் சாராத இப்னு

தைமிய்யா கூட இந்த உண்மையை ஒப்புக் கொள்கிறார். இதோ அவரது கூற்று :

சுத்தமில்லாமல் குர்ஆனைத் தொடக்கூடாது என்ற நிலைப்பாடு சஹாபாக்கள் மற்றும் தாபியீன்களுக்கு மத்தியில் மிகப்பிரபல்யமாக இருந்துள்ளது.

நூல்: ஷரஹுல் உம்தா 1-383

சுத்தமில்லாமலும் குர்ஆனைத் தொடலாம் என்ற நச்சுக் கருத்தை அப்பாவி இளைஞர்களிடம் விதைக்க முனைகின்ற தமிழகத்து வஹ்ஹாபிய முல்லாக்கள் இப்னு தைமிய்யாவை மதிக்கிறார்கள். அவர் ஒரு சிந்தனையாளர் என்றெல்லாம் போற்றுகின்றனர். இவர்களின் வாதப்படி சிந்தனையாளர் கூறியதை ஏற்பதுதானே நியாயமாக இருக்க முடியும்!

விளக்கவுரை-2

வஹ்ஹாபிகளின் தவறான வாதங்களுக்கு தெளிவான விளக்கங்கள்.

இறைமறை வேதமான குர்ஆனை சுத்தமில்லாமல் தொடக்கூடாது என்பதற்கு அடுக்கடுக்கான ஆதாரங்களை கண்டோம். ஆனால் குர்ஆன், ஹதீஸை மட்டும்தான் பின்பற்றுவோம் என்று வாழ்க்கையில் இல்லாமல் வெறும் வார்த்தையில் மட்டும் சொல்-க் கொண்டிருக்கும் வஹ்ஹாபிகள்

குர்ஆனைத் தொடுவதற்கு தூய்மை அவசியமில்லையென்று நாகூசாமல் பேசுகின்றனர்.

அவர்களின் கூற்றுக்கு குர்ஆன் ஹதீஸி-ருந்து நேரிடையான எந்தவொரு ஆதாரத்தையும் அவர்களால் கொண்டு வர இயலவில்லை.அதனால் அர்த்தமற்ற வரட்டுவாதங்களையும், அனர்த்தமுள்ள விதண்டாவாதங்களையும் ஆதாரங்களாக காட்ட முனைகின்றனர். அவர்களின் வாதங்களனைத்தும் குர்ஆன் ஹதீஸ் வழியில் அமைந்த, தகுந்த விளக்கங்களின் மூலம் நொறுக்கப்பட்டு துகள்துகளாக்கப்படும். இன்ஷா அல்லாஹ்.

விவாதம்-1

56-79 வசனத்தில் இறைவன் கூறிய வேதம் தற்போது மக்கள் கைகளில் தவழும் குர்ஆனல்ல. வானுலகிலுள்ள வவ்ஹூல் மஹ்பூல் பலகையில் எழுதப்பட்ட வேதத்தையே குறிக்கிறது.

மேலும் இவ்வசனத்திலுள்ள தூய்மை யானவர்கள் என்பது மலக்குகளையே குறிப்பிட்டுக் காட்டுகிறது. ஏனென்றால், அவர்கள் தான் பாவம் மற்றும் இணைவைப்பி-ருந்து தூய்மையானவர்கள்.

விளக்கம்:-

لَا يَمَسُّهُ إِلَّا الْمُطَهَّرُوْنَ

தூய்மையானவர்களை தவிர (வேறு எவரும்) குர்ஆனைத் தொடமாட்டார்கள்(56-79)

இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள வேதம்

வானிலுள்ள குர்ஆனை குறிப்பது போல மக்கள் கைகளிலுள்ள குர்ஆனையும் குறிக்கும். காரணம் இவ்வசனத்திற்கு பிறகு,

تَنْزِيلٌ مِنْ رَبِّ الْعَالَمِينَ

அகிலங்களின் அதிபதியி (இறைவனி)டமிருந்து (இவ் வேதம்) இறக்கி வைக்கப்பட்டது (56-80)

என்று கூறப்பட்டுள்ளது. இறைவனிடமிருந்து இறக்கி வைக்கப்பட்ட குர்ஆன் என்பது மனிதர்களின் கரங்களிலுள்ள குர்ஆனைத் தான் குறிக்குமே தவிர லவ்ஹுல் மஹ்பூ-லுள்ள குர்ஆனை அல்ல. எனவே தூய்மையானவர்களே தொட வேண்டும் என்ற வசனத்திலுள்ள வேதம் விண்ணுலகிலுள்ள குர்ஆனையும், மண்ணுலகிலுள்ள குர்ஆனையும் அறிவிக்கும் . ஏனெனில் எதார்த்தத்தில் இரண்டும் ஒன்றே.

இவ்வசனத்திலுள்ள தூய்மையானவர்கள் என்பது மலக்குகள் மற்றும் மனிதர்களை குறிக்கும். மலக்குகள் மட்டும் தான் குறிக்கும் என்ற சிலரது கருத்தை ஒரு வாதத்திற்காக ஏற்றுக் கொண்டாலும் கூட அதுவும் சுன்னத் வல்ஜமாஅத் கொள்கைக்குத் தான் வலு சேர்க்கிறது.

அதாவது விண்ணிலுள்ள குர்ஆனை அங்கிருக்கும் தூய்மையானவர் தொடுகிறார்கள் என்றால், அதுபோன்று மண்ணுலகி-ருக்கும் குர்ஆனையும் இங்குள்ள தூய்மையானவர்தான் தொட

வேண்டுமென்ற கருத்தை இவ்வசனம் நமக்கு பாடமாக போதிக்கிறது.

வஹ்ஹாபியத்தின் விஷக்கருத்துக்கு வித்திட்ட இப்னு தைமியாவே இவ்விஷயத்தில் உண்மை யுரைக்கிறார். இதோ அவரது கூற்று :-

நம்மில் பலர் ஓதுவதற்கு பயன்படுத்துகின்ற குர்ஆன் எண்ணிக்கையில் பல இருப்பினும் அடிப்படையில் குர்ஆன் ஒன்றே. காகிதம் மற்றும் பலகையில் எழுதபட்டிருந்தாலும், கல்-ல் எழுதப்பட்டு அல்லது செதுக்கப்பட்டிருந்தாலும் எதார்த்தத்தில் குர்ஆன் ஒன்றுதான்.

விண்ணுலக லவ்ஹுல் மஹ்பூ-லுள்ள குர்ஆனும் மண்ணுலகில் மக்கள் ஒத பயன்படுத்தப்படும் குர்ஆனும் ஒன்றே தான். அதற்குரிய மாண்பும் மகிமையும் இதற்குமுண்டு. எனவே லவ்ஹுல் மஹ்பூ-லுள்ள வேதத்தை சுத்தமானவர்கள் தொடுவதுதான் மரபென்றால் அதே மரபும் நியதியும் மண்ணுலகிலுள்ள வேதத்திற்கும் பொருந்தும் என்பதே சரியானது.

மேலும், மண்ணுலகிலுள்ள குர்ஆன் பரிசுத்தம் வாய்ந்ததென்று இறைவன் குர்ஆனில் தெளிவுபடுத்து கிறான்.

رَسُوْلٌ مِنَ اللّٰهِ يَتْلُوْ صُحُفًا مُطَهَّرَةً (البينة: ٢)

இறைவனிடமிருந்து வந்த தூதர் தூய்மையான ஏடுகளை ஓதுவார். (98-2)

فِيْ صُحُفٍ مُكَرَّمَةٍ مَرْفُوْعَةٍ مُطَهَّرَةٍ (عبس : ١٣- ١٤)

இது கண்ணியமிக்க உயர்வுள்ள தூய்மையான ஏடுகளில் உள்ளது.(80: 13-14)

வேதங்கள் தூய்மையானவை என இறைவன் அடையாளம் காட்டி விட்டான். ஆகவே சுத்தமில்லாதவர்கள் குர்ஆனைத் தொடக்கூடாது.

நூல்- ஷரஹுல் உம்தா - (1 - 384)

வஹ்ஹாபிச தலைவர் இப்னு தைமியாவின் வாக்குமூலம்தான் மேற்கூறப்பட்ட வாசகங்கள். இதையெல்லாம் நாங்கள் ஏற்க மாட்டோம் என்று தமிழக வஹ்ஹாபிகள் பிடிவாதத்தில் உடும்பாக இருந்தால் குருவை மிஞ்சிய சீடர்களாக உலவி வருகிறார்கள் என்று தான் கருதத் தோன்றுகிறது.

கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதையே வாடிக்கையாக்கி அப்பாவி இளைஞர்களுக்கு வேடிக்கை காட்டுகின்ற வஹ்ஹாபிஸ புரோகிதர்கள் அடிக்கடி கத்தி கூறுவார்கள் :-

நாங்கள் குர்ஆன்- ஹதீஸை பின் பற்றுகிறோம். இப்னு தைமியாவை அல்ல. குர்ஆனுக்கும் ஹதீஸுக்கும் முரண்பட்ட கருத்தை எவர் கூறினும் அவர் இப்னு தைமியாவாகவே இருந்தாலும் கூட ஒப்புக் கொள்ள மாட்டோம்.

இவ்வாறு தம்பட்டமடிக்கும் வஹ்ஹாபிசத்தின் தமிழக புரோகிதர்களிடம் நாம் விடுக்கும் வினா இதுதான்:

குர்ஆனைத் தொடுவதற்கு சுத்தம் தேவையென கூறும் இப்னு தைமியா குர்ஆனையும் ஹதீஸையும்

சரியாக விளங்காதவர். மேலும் அவர் வழி கேட்டிலுள்ளார் என்று அவர்கள் கூறத் தயாரா?

கூற மாட்டார்கள்.சுன்னத் வல் ஜமாஅத்தினர் கேள்விக் கணைகள் தொடுத்த போதெல்லாம் குதிகால் பிடரியில் அடிக்க ஓடியவர்கள்தானே இவர்கள். இத்தகையவர்கள் எப்படி பதிலளிப்பார்கள்?.

விவாதம்-2

இறைவன் கூறினான் :

هُدًى لِلنَّاسِ (البقرة : ١٨٥)

(இந்த வேதம்) மக்களனைவருக்கும் நேர்வழிகாட்டக் கூடியது

இறைநம்பிக்கையுள்ள தூய்மையானவர்கள்தான் குர்ஆனைத் தொட வேண்டும் என சட்டமிருந்தால் இறைமறுப்பாளர்கள் எவ்வாறு குர்ஆனைத் தொடமுடியும்? ஓத முடியும்? எவ்வாறு நேர்வழி பெறமுடியும்? குர்ஆன் எல்லோருக்கும் நேர்வழிகாட்டும் என இறைவன் கூறியது நடைமுறையில் சாத்தியமற்றதாகி விடுகிறது. இது குர்ஆன் மக்களை சென்றடைய விடாமல் தடுக்கும் சூழ்ச்சியாகும்.

விளக்கம்:-

பரிசுத்தமானவர்கள் தான் குர்ஆனைத் தொட வேண்டும் என்ற சட்டத்தின் மூலம் இறைமறுப்பாளர்களுக்கு இறை வேதம் கிடைக்க விடாமல் தடுக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டில்

கொஞ்சமும் நியாயமில்லை.

ஏனெனில் இறைமறுப்பாளர்களுக்கு உரிய முறையில் இறைச் செய்தி கிடைப்பதற்குத்தான் இச்சட்டம் வழிவகுத்துக் கொடுக்கிறது. அரபி மொழியிலுள்ள குர்ஆனை மூலப்பிரதியாக மட்டும் கொடுத்தால் இறை மறுப்பாளர்கள் எப்படி படிப்பார்கள்? அப்படியே படித்தாலும் எப்படி விளங்குவார்கள்?.

ஆகவே, குர்ஆன் மொழிபெயர்ப்புகளை – தமிழ் – ஆங்கிலம் மற்றும் பிற மொழி பெயர்ப்பு (தர்ஜமாக்)களை இறைமறுப்பாளர்களுக்கு வழங்க வேண்டும். இவ்வாறு செய்தால் அவர்கள் அதைப்படித்து புரிவதற்கும் இறைவனை அறிவதற்கும் மற்றும் இஸ்லாம் மார்க்கத்தை தெரிவதற்கும் வாய்ப்புண்டாகும்.

தர்ஜமாவில் குர்ஆன் வசனங்களிருந்தாலும் இறைமறுப்பாளர்கள் அதைத் தொடுவதற்கு தடையில்லை.ஏனென்றால், தர்ஜமாவிற்கு குர்ஆன் என்று கூறப்படாது. குர்ஆனின் சட்டம் குர்ஆனுக்குத் தானே தவிர தர்ஜமாவிற்கல்ல.

அதே போல குர்ஆனுக்கு அரபிமொழியில் விளக்கம் எழுதப்பட்ட தப்ஸீருக்கும் குர்ஆன் என்று சொல்லப்படாது. தப்ஸீர் என்பது குர்ஆனின் விரிவுரை நூலாகும்.எனவே குர்ஆனுக்குரிய சட்டம் இதற்குக் கிடையாது.

இறைமறுப்பாளர்களால் படிக்கவும் புரியவும் முடியாத அரபிமொழியில் அமைந்த மூல குர்ஆன் பிரதியைக் கொடுக்காமல் படித்துப் புரியும்

வகையிலுள்ள மொழிபெயர்ப்பு தர்ஜமாக்களை கொடுக்க வேண்டுமென்றுதான் சுன்னத் வல் ஜமாஅத்தினர் கூறுகின்றனர். எதைச் செய்தால் முழுப்பயன் கிடைக்குமோ அதைச் செய்ய வேண்டும் என்கின்றனர்.

இறைமறுப்பாளர்களுக்கு இறைச்செய்தி கிடைக்க விடாமல் தடுக்கப்படுகிறது என்ற வஹ்ஹாபிகளின் தவறான குற்றச்சாட்டு மலைமேல் மோதிய கண்ணாடியாய் நொறுங்கி சுக்கு நூறாகிவிட்டது.

அரபியை தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு குர்ஆனின் விரிவுரை அரபி மொழியில் எழுதப்பட்ட தப்ஸீர்களை வழங்க வேண்டும். மூல குர்ஆன் பிரதியை கொடுக்கக்கூடாது, அரபி மொழியிலேயே குர்ஆனை அருளிய இறைவன் அதை விளக்க-கற்றுக்கொடுக்க அரபி மொழி பேசும் மக்களுக்கு மத்தியில் ஒரு திருத்தூதரையும் அனுப்பி வைத்தான் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இறைவன் கூறினான் :-

وَاَنْزَلْنَا اِلَيْكَ الذِّكْرَ لِتُبَيِّنَ لِلنَّاسِ مَانُزِّلَ اِلَيْهِمْ (النحل: ٤٤)

(நபியே) மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டுமென்பதற்காக உங்களுக்கு குர்ஆனை இறக்கி வைத்தோம்.

(நஹ்ல்-44)

لَقَدْ مَنَّ اللّٰهُ عَلَى الْمُؤْمِنِيْنَ اِذْ بَعَثَ فِيْهِمْ رَسُوْلًا مِنْهُمْ يَتْلُوْ عَلَيْهِمْ آيَاتِهِ وَيُزَكِّيْهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتَابَ وَالْحِكْمَةَ

(آل عمران : ١٦٤)

இறை நம்பிக்கையாளர்களுக்கு அவர்களி-ருந்தே ஒரு தூதரை அவர்களிடையே அனுப்பி வைத்து இறைவன் உறுதியாக பேரருள் புரிந்துள்ளான். அவனுடைய வசனங்களை அவர்களுக்கு அவர் ஓதிக்காட்டுவார். அவர்களை தூய்மைப்படுத்துவார். வேதத்தையும் ஞானத்தையும் அவர்களுக்கு கற்று கொடுப்பார்(3-164)

குர்ஆன் அரபி மொழியி-ருப்பதால் அரபி பேசுபவர்கள் எளிதாக விளங்கிக் கொள்ள இயலுமென்றிருந்தால் இறைவன் திருத்தூதரை அனுப்பிவைத்திருக்க மாட்டான். மக்களுக்கு விளக்கமளிக்க, மற்றும் கற்று கொடுக்க வேண்டுமென்று கட்டளையிட்டிருக்கவும் மாட்டான்.

அரபி மொழி பேசுபவர் என்றாலும் இறைத்தூதரின் விளக்கமில்லாமல் குர்ஆனைப் புரிய முடியாது என்பதற்கு ஒரு சான்று.

عَنْ عَدِيِّ بْنِ حَاتِمٍ رضى الله عنه قَالَ: لَمَّانَزَلَتْ "حَتَّى يَتَبَيَّنَ لَكُمُ الْخَيْطُ الْاَبْيَضُ مِنَ الْخَيْطِ الْاَسْوَدِ" عَمَدْتُ اِلَى عِقَالٍ اَسْوَدَ وَاِلَى عِقَالٍ اَبْيَضَ فَجَعَلْتُهُمَا تَحْتَ وِسَادَتِي

அதிய்யு இப்னு ஹாதிம் ர-யல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்:-

நோன்பு காலத்தில் கருப்புக் கயிறி-ருந்து வெள்ளைக் கயிறு உங்களுக்கு தெளிவாகும் வரை நீங்கள் உண்ணுங்கள் பருகுங்கள்(2-187) என்ற இறை வசனம் இறங்கிய போது கருப்புக்கயிறொன்றையும் வெள்ளைக் கயிறொன்றையும் எடுத்து எனது தலையணைக்குக் கீழே வைத்துக் கொண்டேன். இரவு முழுவதும் கவனித்துக் கொண்டிருந்தேன். எனக்கு தெளிவாகவில்லை.காலையில் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சென்று நடந்தவற்றைக் கூறினேன்.

அவர்கள் கூறினார்கள்: **கருப்பு கயிறு என்பது இரவின் இருளையும் வெள்ளைக் கயிறு என்பது வைகறை வெளிச்சத்தையும் குறிக்கும்.**

நூற்கள்: புகாரீ- எண்: 1783,

முஸ்-ம் - எண்: 1824

இறைவன் குர்ஆனை எளிதாக்கியுள்ளதாக குர்ஆனில் சொல்- காட்டுகிறான்:

وَلَقَدْ يَسَّرْنَا الْقُرْآنَ لِلذِّكْرِ فَهَلْ مِنْ مُدَّكِرٍ (القمر: ١٧)

ஓதி அறிவுரை பெற குர்ஆனை திண்ணமாக நாம் எளிதாக்கியுள்ளோம். அறிவுரை பெறுவோர் உண்டா?(54-17).

ஓதுவதற்கும் விளக்கமளிக்கப்பட்டால் விளங்குவதற்கும் மேலும் அறிவுரை பெறுவதற்கும் குர்ஆன் எளிதாக்கப்பட்டுள்ளது என்றே இவ்வசனத்தி-ருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டும். காரணம் என்னதான் தெளிவுபடுத்தினாலும் எல்லோராலும் விளங்க முடியாத எத்தனையோ நூல்கள் இவ்வையகத்தில் உண்டு. இறைமறை வேதம் குர்ஆன் அவ்வாறல்ல என்பதுதான் இவ்வசனத்தின் கருத்தாகும்.

விவாதம்-3

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், திஹ்யத்துல் கல்பீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களை தனது தூதராக ரோமாபுரி மன்னன் ஹிர்கலிடம் அனுப்பி வைத்தார்கள். இஸ்லாத்தில் இணையு அழைப்பு விடுத்து அவருக்கு ஒரு கடிதம் கொடுத்தனுப்பினார்கள். அக்கடிதத்தில் கீழ்க்காணும் வசனம் எழுதப்பட்டிருந்தது.

فجعلت انظر في الليل فلا يستبين لي فغدوت على ر…

…صلى الله عليه وسلم فذكرت له ذلك فقال انما

ذلك سواد الليل وبياض النهار (رواه البخاري ١٨٣…

ومسلم ١٨٢٤)

يَااَهْلَ الْكِتَابِ تَعَالَوْا اِلَى كَلِمَةٍ سَوَاءٍ بَيْنَنَا وَبَيْنَكُمْ

اَلَّا نَعْبُدَ اِلَّا اللّٰهَ وَلَا نُشْرِكَ بِهِ شَيْئًا وَلَا يَتَّخِذَ بَعْضُنَا بَعْضًا

اَرْبَابًا مِنْ دُوْنِ اللّٰهِ فَاِنْ تَوَلَّوْا فَقُوْلُوْا اشْهَدُوْا بِاَنَّا مُسْلِمُوْنَ

(آل عمران ٦٤)

வேதமுடையவர்களே! எங்களுக்கும் உங்களுக்கும் மத்தியிலுள்ள பொதுவான விஷயத்தின் பக்கம் வாருங்கள்! அல்லாஹ்வைத் தவிர (வேறு எவரையும்) வணங்க மாட்டோம். அவனுக்கு எதையும் இணையாக்க மாட்டோம். அல்லாஹ்வைத் தவிர நம்மில் யாரும் எவரையும் தெய்வங்களாக ஆக்கக்கூடாது. அவர்கள் புறக்கணித்தால், உறுதியாக நாங்கள் முஸ்-ம்கள் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள் என்று கூறிவிடுங்கள்! (3-64)

நூற்கள் :- புகாரி- எண்: 6,

முஸ்-ம்- எண்: 3322

இறைவசனம் எழுதப்பட்ட அக்கடிதத்தை இறைமறுப்பாளரான ஹெர்கு-ஸ் தொடுவார் என்று தெரிந்தேதான் இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கொடுத்தனுப்பியுள்ளார்கள். தொடுவது கூடாது என்றிருந்தால் இறைவசனத்தை அக்கடிதத்தில் எழுதியிருக்க மாட்டார்கள்.

இறைமறுப்பாளர்களுக்கே தொடுவது கூடும் எனும் போது இறைநம்பிக்கையாளர்களுக்கு ஏன் கூடாது?

விளக்கம்:-

குர்ஆனுடைய வசனம் எழுதப்பட்ட கடிதத்தை சுத்தமில்லாமல் தொடலாம் என்பதற்குத்தான் இந்த ஹதீஸ் ஆதாரமே தவிர குர்ஆனையே தொடலாம்

என்பதற்கல்ல. அது போன்ற கடிதத்திற்கு குர்ஆன் என்று கூறப்படாது. எனவே குர்ஆனுடைய சட்டம் இதற்கு பொருந்தாது.

அல்ஹாீபிழ் இப்னு ஹஜர் அஸ்கலானி ர-யல்லாஹுு அன்ஹுு கூறுகிறார்கள்-

இறைத்தூதர் (ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹெர்கு-ஸ் மன்னனுக்கு எழுதிய கடிதத்தில் இறைவசனம் அல்லாமல் வேறு செய்திகளும் எழுதப்பட்டிருந்தன. இக்கடிதம் குர்ஆன் வசனங்கள் எழுதப்பட்ட தீப்ஸீர் மற்றும் ீபிக்ஹ் நூற்களைப் போன்றுள்ளதால் அவற்றிற்குரிய சட்டமே இக்கடிதத்திற்கும் பொருந்தும்.

தீப்ஸீர் ீபிக்ஹ் நூற்களை சுத்தமில்லாமல் தொடுவதும் படிப்பதும் கூடுமென பெரும்பான்மை அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மார்க்கப் பிரச்சாரத்தின் நலனை கருத்தில் கொண்டு கடிதங்களில் குர்ஆன் வசனங்களை எழுதுவது ஆகுமானதே என்ற தெளிந்த கருத்தை இமாம் அஹ்மத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார்கள்.

நூல்: ீபத்ஹுல் பாரி 1-408

குர்ஆன் வசனங்கள் இடம் பெற்ற தர்ஜமா-மொழிபெயர்ப்பு, ஹதீீத், ீபிக்ஹ் மற்றும் தீப்ஸீர் நூல்களை தொடுவதற்கு சுத்தம் கட்டாயமில்லை. தூய்மையில்லாமல் தொடுவதற்கு அனுமதியுண்டு. அதுபோன்று இறைவசனம் எழுதப்பட்ட

கடிதத்தையும் தூய்மையில்லாமல் தொடலாம். காரணம் இவையெல்லாம் குர்ஆனல்ல.

இன்னொரு விளக்கம்-

கடிதத்தில் எழுதப்பட்ட வசனத்தில் அதன் ஆரம்ப வார்த்தையான 'குல்' என்பது விடபட்டிருக்கிறது. இதி-ருந்து இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறைவசனம் என்ற எண்ணத்தில் எழுதவில்லை. சொல்ல நினைத்ததை தனது சொந்த நடையில் கூறாமல் குர்ஆனில் இடம் பெற்ற வாசகங்களின் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்று தான் விளங்க வேண்டும். குர்ஆனின் வசனம் என்ற அடிப்படையில் எழுதியிருந்தால் இவ்வசனத்தின் முதல் வார்த்தையான 'குல்' என்பதை விட்டிருக்க மாட்டார்கள்.

கூறவந்த கருத்தை தெரிவிப்பதற்கு சுயமாக வாக்கியம் அமைக்காமல் பிற நூற்களிலுள்ள வாசகங்களைப் பயன்படுத்தும் முறைக்கு அரபி இலக்கியத்தில் 'இக்திபாஸ்' என்று சொல்லப்படும். இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கடிதத்தில் எழுதியவை 'இக்திபாஸ்' என்ற வகையைச் சார்ந்தது.

அரபி இலக்கியத்தின் அரிச்சுவடி தெரியாத தமிழக வஹ்ஹாபிச புரோகிதர்களுக்கு இதுவெல்லாம் எங்கே விளங்கப் போகிறது. அவர்களுக்கு குர்ஆன்-ஹதீஃத் தெரியாது. இத்துடன் அரபி இலக்கியமும் புரியாது என்பது மேகமில்லா சூரிய ஒளி.

விவாதம் -4

ஈமான் - இறைநம்பிக்கையுள்ள ஒவ்வொரு மனிதனும் தூய்மையானவனே. ஏனெனில், இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இயம்பினார்கள்-

إِنَّ الْمُؤْمِنَ لَا يَنْجُسُ (رواه البخارى ومسلم)

உறுதியாக இறைநம்பிக்கையாளன் அசுத்தமாக மாட்டான்.

நூல்: புகாரீ- எண்: 276,

முஸ்லீம்-எண்: 556

எனவே, உளூ இல்லாமல் குர்ஆனைத் தொட எத்தடையுமில்லை.

விளக்கம்-

இஸ்லாமிய மார்க்கத்தில் சுத்தம் இருவகைப்படும்.

1. உள்ள சுத்தம்.
2. உடல் சுத்தம்.

ஈமான் - இறை நம்பிக்கை கொள்ளாமல் இணை வைப்போர் அனைவரும் உள்ளம் அசுத்தமானவர்கள். இவர்களைப்பற்றி இறைவன் அருள் மறையில் கூறினான்:

إِنَّمَا الْمُشْرِكُونَ نَجَسٌ (التوبة : ٢٨)

'இணைவைப்போரெல்லாம் உறுதியாக அசுத்தமானவர்களே.'

இறைமறுப்பாளர்களின் உடலும் உடையும் தூய்மையாக இருந்தாலும் அவர்கள் அசுத்தமான வர்களே என்று இவ்வசனம் கூறுவதற்குரிய காரணி அவர்களின் உள்ளங்களை கருத்தில் கொண்டே தவிர அவர்களின் உடல்களை கவனித்தல்ல என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

இணைவைப்பை விட்டுவிட்டு ஈமான் - இறை நம்பிக்கை- கொள்கின்றபோது உள்ளம் தூய்மை பெருகிறது. இதையே இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இயம்பினார்கள்:

'உறுதியாக இறைநம்பிக்கையாளன் அசுத்தமாக மாட்டான்.'

நூல் :- புகாரீ- எண்: 276,
முஸ்லீம்- எண்: 556

இத்தகைய இறைநம்பிக்கையாளர்களுக்கு உடல் சுத்தம் அவசியமென இஸ்லாம் மார்க்கம் போதிக்கிறது. அதனால் தான் உளூ, குளிப்பு மற்றும் நஜீஸ் அகற்றுதல் போன்ற சட்டங்கள் அவர்களுக்குண்டு என்பதையும் இஸ்லாம் சொல்-க்காட்டுகிறது.

இறை நம்பிக்கையாளன் தூய்மையானவன். எனவே குர்ஆனைத் தொட உளூ அவசியமில்லை என்ற வாதத்தை வஹ்ஹாபிகள் முன் வைத்தால் தொழுகைக்கும் உளூ தேவையில்லை என்ற அபாயகரமான அர்த்தமல்லவா வந்து விடும் தொழுகைக்கு உளூ கட்டாயம் என்பதற்கு சான்றுகள் உள்ளன என்று வஹ்ஹாபிகள் கூறினால் அவர்களுக்கு

நாம் சொல்-க் கொள்வோம். குர்ஆனைத் தொடுவதற்கு உளூ தேவை என்பதற்கும் பல ஆதாரங்கள் இருக்கின்றன.

விவாதம் - 5

குர்ஆன் ஓதுவது திக்ரில் உள்ளடங்கிய வணக்கம். இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனைத்து நேரங்களிலும் திக்ர் செய்துள்ளார்கள் என்று ஹதீஸில் வந்துள்ளது.

அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா கூறினார்கள்:

عَنْ عَائِشَةَ قَالَتْ كَانَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَذْكُرُ اللهَ عَلٰى كُلِّ اَحْيَانِهِ (رواه مسلم والترمذى واحمد)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வை எல்லா நேரங்களிலும் திக்ர் செய்யும் வழமையுள்ளவர்களாக இருந்தார்கள்.

நூல் : முஸ்-ம்- எண்: 558,
திர்மிதீ- எண்: 3306,
அஹ்மத்- எண்: 23274

எல்லா நேரங்களிலும் இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் திக்ர் செய்துள்ளார்களென்றால் குர்ஆன் ஓதுவது திக்ரில் கட்டுப்பட்டது என்ற அடிப்படையில் குளிப்பு கடமையான சமயத்திலும் குர்ஆன் ஓதியிருப்பார்கள் என யூகிக்க முடிகிறது.

விளக்கம்:-

சுன்னத் வல் ஜமாஅத்தினருக்கும் தமிழக வஹ்ஹாபிச முல்லாக்களுக்குமிடையில் மிகப்பெரிய வித்தியாசமுண்டு. குர்ஆனுக்கும், ஹதீதுக்கும் முற்றிலும் அடிபணிந்து நடப்பவர்கள் சுன்னத் வல் ஜமாஅத்தினர். குர்ஆனையும், ஹதீதையும் தங்கள் கொள்கைக்கு ஒத்துபோக வைக்கக் கூடியவர்கள் வஹ்ஹாபிகள். ஒத்து போக வைக்க இயலாத நிலையில் அவ்விரண்டையும் வளைப்பார்கள். வளைக்க முடியாவிட்டால் ஒடிக்க முனைவார்கள்.

இந்த வஹ்ஹாபிகளைப் பற்றித் தான் இமாம் புகாரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி எச்சரிக்கை விடுக்கிறார்கள். 'பின்பற்ற வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் ஹதீதைத் தேடுபவர் நபிவழியில் உள்ளார். தனது சுய விருப்பத்தை நிலை நிறுத்துவதற்காக ஹதீதைத் தேடுபவர் பித்அத் வாதியாவார்'.

இமாம் புகாரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் தெளிவுரையின்படி இன்றைக்கு பித்அத்வாதிகளாக உலவி வரக்கூடியவர்கள் வஹ்ஹாபிகள்தான் என்பதால் இறை நம்பிக்கை யாளர்கள் அனைவரும் இந்த வஹ்ஹாபிகளின் வழிகேட்டுக் கொள்கைகளில் எச்சரிக்கை உணர்வோடு இருத்தல் அவசியமாகும்.

அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா

அவர்களின் கூற்றில் வஹ்ஹாபிகள் சுற்றி வளைத்து தங்களது யூகத்தைத் திணிக்கிறார்கள். குளிப்பு கடமையானவர்கள் குர்ஆன் ஓதலாம் என்பதற்கு எந்த சான்றும் அதி-ல்லை.

ஏனென்றால் எல்லா நேரங்களிலும் குர்ஆன் ஓதுவார்கள் என்ற வாக்கியம் அதில் இடம் பெறவில்லை. திக்ர் செய்வார்கள் என்றுதான் உள்ளது. திக்ர் என்பது பலபொருளுள்ள ஒரு பொதுச் சொல். குர்ஆன், இறைப்புகழ் மற்றும் பிரார்த்தனை சம்பந்தப் பட்டவைகளைக் குறிக்கும் வார்த்தைதான் திக்ர்.

ஆகவே, ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கும் செய்தியின் மூலமாக குர்ஆன் அல்லாத மற்ற திக்ருகளை இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஓதியுள்ளார்கள் என்று தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏனென்றால் ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியுள்ளார்கள்:-

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எல்லா நேரங்களிலும் குர்ஆனை எங்களுக்கு ஓதிக் காண்பிப்பார்கள்.. ஆனால் குளிப்பு கடமையான நிலையில் மட்டும் ஓத மாட்டார்கள்.

நூற்கள் : அஹ்மத், அபூதாவூத், திர்மிதி,
இப்னு மாஜா, நஸாயீ

மேலும் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா

அவர்கள் கூறியது நாவால் மொழியும் திக்ரைப் பற்றியதல்ல. உள்ளத்தால் நினைக்கும் திக்ரைப் பற்றியதுதான் என்பதையும் நம்மால் வெள்ளிடை மலையென அறிந்து கொள்ள முடியும்.

காரணம் எல்லா நேரமும் என்பது கழிவரையில் இருக்கும் காலத்தையும் உள்ளடக்கும். ஆனால் கழிவரையில் இருக்கும் போது நாவால் திக்ர் செய்தல் இஸ்லாமிய மார்க்கத்தில் தடை செய்யப்பட்டுள்ளது.

عَنِ ابْنِ عُمَرَ اَنَّ رَجُلاً مَرَّوَرَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَبُوْلُ فَسَلَّمَ فَلَمْ يَرُدَّ عَلَيْهِ (رواه مسلم وابوداؤد والترمذى والنسائى وابن ماجة)

ஹழ்ரத் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.-

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிறுநீர் கழித்துக் கொண்டிருக்கும் போது அவ்வழியாக சென்ற நபித் தோழர் ஒருவர் சலாம் சொன்னார். இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதில் சலாம் கூறவில்லை.

நூற்கள் : முஸ்-ம்- எண்: 555,
அபூதாவூத்- எண்: 15,
திர்மிதீ- எண்: 83,
நசாயீ- எண்: 37,
இப்னுமாஜா- எண்: 347.

எனவே எல்லா நேரமும் திக்ர் செய்தல் என்பது. கழிவறையில் இருந்தாலும் கூட, உள்ளத்தால் செய்யும் திக்ரில் மட்டுமே சாத்தியமாகும். இதி-ருந்து ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் எல்லா நேரமும் திக்ர் என்ற கூற்று குர்ஆன் ஓதுவதற்கு அறவே பொருந்தாதென்று உறுதிபடக் கூறமுடியும்.

விவாதம்-6

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் குர்ஆன் ஒன்றுதிரட்டப்படவில்லை. எனவே தூய்மையானவர்கள் குர்ஆனைத் தொட வேண்டுமென இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளையிட்டிருக்க வாய்ப்பில்லை.

விளக்கம்-

எல்லா வசனங்களும் ஒன்று திரட்டப்பட்ட தொகுப்புக்கு குர்ஆன் என்று சொல்லப்படுவது போன்றே குர்ஆனின் சில வசனங்கள் மட்டும் எழுதப்பட்டவைகளுக்கும் குர்ஆன் எனக் கூறலாம்.

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் காலத்தில் மரப்பலகைகளிலும் எலும்புத் துண்டுகளிலும் மற்றும் கற்களிலும் குர்ஆன் வசனங்கள் எழுதப்பட்டன. இவைகளுக்கெல்லாம் குர்ஆன் எனும் வார்த்தையை இறைவனும் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் பிரயோகித்துள்ளனர்.

இறைவன் கூறினான்:-

وَرَتِّلِ الْقُرْاٰنَ تَرْتِيْلًا (المزمل ٤)

குர்ஆனை தெளிவாக நிறுத்தி ஓதுவீராக!
(முஜ்ஜம்மில் : 4)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:-

عَنْ اَبِىْ سَعِيْدِ الْخُدْرِيِّ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ لَاتَكْتُبُوْا عَنِّيْ شَيْأً اِلَّا الْقُرْآنَ فَمَنْ كَتَبَ عَنِّىْ شَيْأً غَيْرَ الْقُرْآنِ فَلْيَمْحُهُ (رواه احمد ومسلم)

நான் கூறுபவற்றில் குர்ஆனைத் தவிர வேறெதையும் எழுதாதீர்கள்! குர்ஆனல்லாததை யாராவது எழுதியிருந்தால் அவர் அதை அழித்து விடட்டும்.

அறிவிப்பாளர்- அபூ ஸயீத் அல்ஹுத்ரிய்யி ர-யல்லாஹு அன்ஹு அவர்கள்

நூற்கள் :- அஹ்மத்- எண்: 10731,
முஸ்-ம்- எண்: 5326

குர்ஆன் வசனங்கள் மட்டும் எழுதப்பட்டவைகளுக்கு அவை சில வசனங்களாக இருப்பினும் குர்ஆன் எனும் சொல் பொருந்துமென்பதை மேற்கண்ட இறைவசனமும் நபிமொழியும் அறிவிக்கின்றன.

குர்ஆனைத் தவிர வேறெதையும் எழுதக்

கூடாது என்ற தடையை இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்னர் தளர்த்தி விட்டார்கள். அம்ர் இப்னு ஹஜ்ம் ர-யல்லாஹு அன்ஹு அவர்களுக்கு கூறினார்கள்:

عَنْ عَبْدِ اللهِ بْنِ عَمْرٍو قَالَ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اُكْتُبْ فَوَالَّذِيْ نَفْسِيْ بِيَدِهِ مَاخَرَجَ مِنِّيْ اِلَّاحَقٌّ

(رواه احمد وابوداؤد والدارمی)

(அம்ரே நான் கூறுவதை) எழுதுக! எனது ஆத்மா யார் கைவசமுள்ளதோ அ(ந்த இறை)வனின் மீது ஆணை(யிட்டுக்கூறுகிறேன்) என்னிடமிருந்து வெளிப்படுகின்ற (சொல்- செயல்) அனைத்தும் சத்தியமே.

அறிவிப்பாளர்- அப்துல்லாஹ் இப்னு அம்ர் ரழியல்லாஹு அன்ஹு

நூற்கள்: அஹ்மத்- எண்: 6221,
அபூதாவூத்- எண்: 3161,
தாரமீ- எண்: 484

குர்ஆனோடு மற்றவை கலந்துவிட வாய்ப்புள்ளது என்று அஞ்சிய சமயத்தில் குர்ஆனை மட்டும் தான் எழுதவேண்டுமென இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளையிட்டார்கள். அந்த அச்சம் இனியில்லை என்ற நிலைவந்த போது தனது மணி மொழிகளான ஹதீஃத்களை எழுதுவதற்கு அனுமதி வழங்கினார்கள்.

விவாதம் -7

தூய்மையில்லாமல் குர்ஆனைத் தொடக்கூடாதென்பதற்கு இஜ்மாஃ - ஒருமித்த கருத்து என்ற ஆதாரத்தை ஒப்புக் கொள்ள இயலாது. ஏனெனில், தாபியீன்களிலும் அதன் பின் வந்தவர்களிலும் ஒரு சிலர் சுத்தமில்லாமல் குர்ஆனைத் தொடலாம் என்ற மாற்றுக் கருத்தைத் தெரிவித்துள்ளனர். அதனால் இஜ்மாஃ- ஒருமித்த கருத்து என்ற ஆதாரம் அடிபட்டுப்போகிறது.

விளக்கம் -

இந்த வாதம் ஏற்புக்குரியதல்ல , ஏனென்றால் சுத்தமானவர்கள்தான் குர்ஆனைத் தொட வேண்டுமென்பதில் சஹாபா பெருமக்கள் ஒருமித்த கருத்துடையவர்களாக இருந்துள்ளனர். அவர்களின் காலத்தில் இதற்கு மாற்று கருத்து தெரிவித்த ஒரு நபித் தோழர் கூட கிடையாது.

இதன் மூலம் தூய்மையின்றி குர்ஆனைத் தொடுவது மார்க்கத்தில் விலக்கப்பட்ட செயல்- ஹராம்- என்பதே நபித்தோழர்களின் இஜ்மாஃ- ஆக இருந்தது என்பது உள்ளங்கை நெல்-க்கனி.

வஹ்ஹாபியத்தின் விஷக்கருத்தைப் புகுத்திய இப்னுதைமியாவே இப்பேருண்மையை ஏற்றுக்கொள் கிறார். இதோ அவரது ஒப்புதல் வாக்குமூலம்-

குர்ஆனை தூய்மையானவரே தொட வேண்டுமென்பதுதான் சல்மான் ஃபார்ஸீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், அப்துல்லாஹ்

இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மற்றும் சஹாபா பெருமக்களின் கூற்றாகும். ஒரு நபித் தோழர்கூட இதற்கு மாற்றமான கருத்தைத் தெரிவித்ததாக அறியப்படவில்லை.

நூல்: மஜ்மூவுல் ீபதாவா 21 - 266

இமாம் நவவீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் கருத்து:-

குர்ஆனைத் தொடுவதற்கு சுத்தம் தேவை என்பதே அலீ ரழியல்லாஹு அன்ஹு, ச ீது இப்னு அபீ வக்காஸ் ரழியல்லாஹு அன்ஹு, அப்துல்லாஹ் இப்னு உமர் ர-யல்லாஹு அன்ஹு ஆகியோரின் கூற்றாகும். இவர்களுக்கெதிராக எந்த ஒரு நபித் தோழரும் மாற்றுக் கருத்து தெரிவிக்க வில்லை.

நூல்- மஜ்மூவு ஷரஹீல் முஹ ீத்தப் 2-80

நபிமார்களுக்கு அடுத்து மனித சமூகத்தில் சிறந்து விளங்கும் சஹாபா பெருமக்களின் முடிவுக்கு முரண்பட்ட வகையில் தமிழக வஹ்ஹாபிகள் கூறும் கருத்து புறந்தள்ளப்பட வேண்டும். ஏனெனில் அந்த நபித்தோழர்கள்,

★ இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நேரிடையாக பாடம் பயின்றவர்கள்.
★ இந்த சமூகத்தில் இஸ்லாமிய மார்க்கத்தை நன்கறிந்தவர்கள்.
★ இந்த சமுதாயத்தில் மிக நம்பிக்கைக் குரியவர்கள்.
★ இச்சமூகத்தின் நீதிமான்களாகத் திகழ்ந்தவர்கள்.

இத்தகையவர்களின் கூற்றே சத்தியத்தின் பக்கம் அண்மித்திருக்கும் என்பதில் எள்முனை யளவும் ஐயமில்லை. மற்றவர்களைவிட இவர்களின் கருத்தே மிகச்சரியாக இருக்குமென்பதை உறுதிபடக் கூற முடியும்.

உண்மை இவ்வாறிருக்க மேற்கண்ட சிறப்பம்சங்களில் ஒன்றுகூட இல்லாத வஹ்ஹாபிச முல்லாக்களின் தகாத கோட்பாடுகளை பின்பற்றலாமா? என்று திசைமாறிப் போன இளைஞர்கள் யோசித்துப்பார்க்க வேண்டும்.

இறைவன் கூறினான்:-

وَالسَّابِقُوْنَ الْاَوَّلُوْنَ مِنَ الْمُهَاجِرِيْنَ وَالْاَنْصَارِ وَالَّذِيْنَ اتَّبَعُوْهُمْ بِاِحْسَانٍ رَضِيَ اللّٰهُ عَنْهُمْ وَرَضُوْا عَنْهُ وَاَعَدَّلَهُمْ جَنّٰتٍ تَجْرِىْ تَحْتَهَا الْاَنْهَارُ خَالِدِيْنَ فِيْهَا اَبَدًا ذٰلِكَ الْفَوْزُ الْعَظِيْمُ

முந்தியவர்களாகவும் முதன்மையானவர்களாகவும் இருக்கின்ற முஹாஜிர் மற்றும் அன்ஸார் (தோழர்)களையும், அவர்களை அழகிய முறையில் பின்பற்றியோரையும் அல்லாஹ் பொருந்திக் கொண்டான். அவர்களும் அல்லாஹ்வைப் பொருந்திக் கொண்டார்கள். அவர்களுக்கு சுவனப்பூங்காக்களை அவன் தயார் செய்துள்ளான். அவற்றினுள் ஆறுகள் ஓடுகின்றன. எக்காலமும் அவற்றில் நிரந்தரமாக இருப்பார்கள். அதுதான் மகத்தான வெற்றி. (9 : 100)

சஹாபிகளைப் பின்தொடர வேண்டுமென்று வ-யுறுத்திய இறைவன் எங்கேயாவது வஹ்ஹாபிகளைப் பின்பற்ற வேண்டும் எனக் கூறியுள்ளானா? இல்லையே!

எனவே, மறுமையின் வெற்றியை நோக்கமாகக் கொண்டவர்களே! ஒரு முடிவுக்கு வாருங்கள்! நாம் பின்பற்ற வேண்டியது

ஷ நாயகத்தின் சஹாபிகளையா?

அல்லது

ஷ தமிழகத்தின் வஹ்ஹாபிகளையா?

சஹாபாக்களையே பின்தொடர்வோமென நீங்கள் தீர்மாணித்து விட்டால் அல்லாஹ்வின் அருள்மறையான குர்ஆனை தூய்மையான நிலையில் மட்டுமே தொடுங்கள்! அதுவே வெற்றிதரும் நேர்வழி, நினைவில் வையுங்கள்!

விவாதம் -8

பரிசுத்தமானவர்களே தொட வேண்டுமென அறிவிக்கும் அனைத்து ஹதீஸ்களும் பலவீனமானவை. அவைகளை சான்றுகளாக ஒப்புக் கொள்ள முடியாது. அவற்றை அமல் செய்வதும் ஏற்கத்தக்கதல்ல.

விளக்கம்:-

இந்த ஹதீஸ்கள் ஆதாரபூர்வமானவையென்று பல ஹதீஃத் கலை அறிஞர்கள் அறிவித்துள்ளனர். இவற்றில் ஒவ்வொரு ஹதீஃதும் ஏதோ ஒரு வகையில் குறைபாட்டுடன் உள்ளது என்று சிலர் கூறுவதை ஒரு

பேச்சுக்காக ஒப்புக் கொண்டாலும் பலவழிகளில் அறிவிக்கப்படுவதால் 'ஹஸன்' - அழகிய ஹதீஸ் - என்ற தரத்தையும் தகுதியையும் பெற்றுவிடுகிறது. எனவே, இது போன்ற ஹதீஸ்களை ஆதாரங்களாக ஏற்றுக் கொள்ள முடியும் என்பதோடு அமல் செய்வதும் கட்டாயமாகும் என ஹதீஸ் கலை வல்லுனர்களில் பலர் தெரிவித்துள்ளனர்.

இமாம் அஹ்மத் மற்றும் இமாம் இஸ்ஹாக் இப்னு ராகவய்ஹி ரஹ்மத்துல்லாஹி அலைஹிமா ஆகிய இருவரும் பரிசுத்தமானவரே குர்ஆனைத் தொட வேண்டும் என்ற ஹதீஸை ஆதாரமாகக் கொண்டு சட்டம் இயற்றியுள்ளனர்.

ஒருபடி மேலாக இமாம் இஸ்ஹாக் இப்னு ராகவய்ஹி அந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதென்று வெளிப்படையாகவே கருத்து தெரிவித்துள்ளார்கள்.

இமாம் இஸ்ஹாக் இப்னு மன்ஸூர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தனது சட்ட நூ-ல் கீழ்க்காணும் நிகழ்வைக் குறிப்பிடுகிறார்கள்.

உளூ இல்லாமல் ஒருவன் குர்ஆனை ஓதுவது கூடுமா? என இமாம் அஹ்மத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடம் நான் கேட்டேன்.அதற்கவர்கள் பதிலுரைத்தார்கள். "ஓதுவது கூடும். ஆனால் குர்ஆனைத் தொட்டு ஓதுவதென்றால் உளூ அவசியம்."

இமாம் இஸ்ஹாக் இப்னு ராகவய்ஹி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் கூற்றும்

இதுவேதான்.

நூல் - மஸாயில் இஸ்ஹாக் இப்னு மன்ஸூர்
பக்கம் -5
இர்வாவுல் ஙலீல் 1-161

விவாதம்-9

தூய்மையானவர்களைத் தவிர (வேறு யாரும்)குர்ஆனைத் தொட மாட்டார்கள் (56-79)

இந்த வசனத்தில் தூய்மையானவர்கள்தான் குர்ஆனைத் தொடுவார்கள் என்ற செய்தி கூறப்பட்டுள்ளதே தவிர தூய்மையானவர்கள்தான் குர்ஆனைத் தொட வேண்டும் என்று கட்டளைப் பிறப்பிக்கப்படவில்லை.

ஏனென்றால் இவ்வசனத்தில் 'யமஸ்ஸு' என்ற வினைச் சொல்-ன் இறுதி எழுத்தான ஸீனுக்கு வளைவுக் கோடு (பேஷ் - ரஃப்வு) உள்ளது. தடை செய்யும் கட்டளை வாசகமாக கருதப்பட வேண்டுமானால் கடைசி எழுத்து ஸீனுக்கு மேல்கோடு (ஜபர் - ஃபத்ஹு)இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறில்லை, எனவே செய்தியாக கூறப்பட்டதை கட்டளை அர்த்தமாக மாற்றக் கூடாது.

விளக்கம்-

அரபி இலக்கணப்படி செய்தி வாசகம் சூழ்நிலைக்கேற்ப சில கட்டங்களில் கட்டளை வாசகமாக பொருள் கொள்ளப்படும். உதாரணமாக, இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மொழிந்தார்கள்-

لَايُعْضَدُ شَجَرُهَا (رواه البخارى ومسلم)

மக்காவிலுள்ள மரம் வெட்டப்படாது

நூல்: புகாரீ- எண்: 109,
முஸ்லீம்- எண்: 2415

மக்காவின் மரம் வெட்டப்படாது என்ற செய்தி வாசகமாக உள்ள இந்த நபிமொழி மக்காவின் மரம் வெட்டப்படக்கூடாது என்ற கட்டளை வாசகத்தின் பொருளைத் தருகிறது.

இமாம் ஜஸ்ஸாஸ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்:-

பரிசுத்தமானவர்கள் தவிர (வேறெவரும்) குர்ஆனைத் தொட மாட்டார்கள் என்ற வசனம் வெளித்தோற்றத்தில் செய்தி வாக்கியமாக இருப்பினும் அதன் அர்த்தம் கட்டளை வாக்கியத்திற்குரியதே. நபிகள் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அம்ரு இப்னு ஹஜ்ம் ர-யல்லாஹு அன்ஹு அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் பரிசுத்தமானவரே குர்ஆனைத் தொட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்பதே இதற்குக் காரணியாகும்.

நூல்: அஹ்காமுல் குர்ஆன் 3-416

விவாதம் - 10

உளூ இல்லாமல் இருக்கும் போது குர்ஆன் ஓதுவதே கூடும் என்கிறபோது குர்ஆனைத் தொடுவதும் கூடும் என்றுதானே சட்டம் இருக்க வேண்டும்.

விளக்கம்-

மார்க்கத்தை போதிக்கிற அதிகாரம் இறைவனுக்கும் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் மட்டுமே உண்டு. இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சுத்தமில்லாமல் குர்ஆனைத் தொடக்கூடாதென்றார்கள். ஆகவே,

☐ உளூ இல்லாமல் குர்ஆனைத் தொடக்கூடாது என்பது மார்க்க சட்டமாகிவிடுகிறது.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உளூ இல்லாமல் குர்ஆன் ஓதியுள்ளார்கள். எனவே,

☐ உளூ இல்லாமல் குர்ஆன் ஓதுவது கூடும் என்பது மார்க்க சட்டமாகிவிடுகிறது.

(இது சம்பந்தப்பட்ட ஹதீஸ்கள் இந்நூ-ன் துவக்கத்தில் கூறப்பட்டுள்ளன.)

இறைவனோ இறைத்தூதரோ ஒன்றைக் கூறிவிட்டால் அதை அப்படியே ஏற்றுக் கொள்வது இறைநம்பிக்கையாளர்களின் கடமையாகும். இதைவிடுத்து அதற்கு அச்சட்டமிருந்தால் இதற்கும் அது இருந்தாக வேண்டுமென்று தனது சுயக்கருத்தை மார்க்கத்தில் புகுத்துவது அதிகப்பிரங்கித்தனமாகும். மேலும், இறைவனுக்கும் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் மட்டுமே இருக்கிற மார்க்க அதிகாரத்தை தனது கையிலெடுத்த பெருங்குற்றத்திற்கும் ஆளாக நேரிடும்.

குர்ஆனைத் தொடுவது போன்று குர்ஆன் ஓதுவதற்கும் உளூ அவசியம் என்ற சட்டமிருந்தால் அது மக்களுக்கு சிரமத்தைத் தோற்றுவிக்கும். பல சமயங்களில் குர்ஆன் ஓதப்படாத சூழ்நிலையை உருவாக்கிவிடும். ஓதக்கூடியவர்களுக்கு சிரமம் அகல வேண்டுமென்பதற்காக மார்க்கம் எளிதாக்கியுள்ளது என்றும் கூட நாம் புரிந்து கொள்ளலாம்.

விவாதம்-11

திருக்குர்ஆன் எழுத்துவடிவில் அருளப்படவில்லை. ஒ- வடிவத்தில்தான் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு குர்ஆன் ஓதி காண்பிக்கபட்டது.

எழுத்து வடிவில் அருளப்படாததைத் தொடுகின்ற பேச்சுக்கே இடமில்லை. தொடும் விதத்தில் திருக்குர்ஆன் அருளப்பட்டிருந்தால் மட்டுமே தொடுதல் சம்பந்தப்பட்ட சட்டம் வரும்.

விளக்கம்-

இதுவரை வஹ்ஹாபிகளால் தொடுக்கப்பட்ட வாதங்கள் சரியோ தவறோ ஏதோ பரவாயில்லை ரகம் என்று கூறலாம். ஆனால் இந்த வினோதமான விவாதத்தை குர்ஆனிலும் ஹதீதிலும் பூஜ்யங்களாக உள்ளவர்களால் மட்டுமே முன்வைக்க முடியும்.

பலகையில் பதியப்பட்டோ அல்லது காகிதத்தில் எழுதப்பட்டோ குர்ஆன் அருளப்படவில்லை என்பதை பாமர இஸ்லாமியனும் தெரிந்து வைத்துள்ளான். ஆனால், இதைக்கூட அரியதொரு

கண்டுபிடிப்பைப் போல படம் காட்டுகிறார்களென்றால் மார்க்க விஷயத்தில் எவ்வளவு பெரிய உச்சகட்ட அறியாமையில் இருக்கிறார்கள் என்று நம்மால் விளங்க முடிகிறது.

குர்ஆனுக்கு எழுத்துக்கள் உண்டு. குர்ஆன் ஓதுகின்ற போது எழுகின்ற ஓ-க்கும் எழுத்துக்களுண்டு. நபித்தோழர்களால் எழுதிவைக்கப்பட்ட குர்ஆனுக்கும் எழுத்துக்கள் உள்ளன. குர்ஆனின் எழுத்துக்கள் எழுதப்பட்டு கண்களுக்குத் தென்படும் வகையில் ஏதோ ஒரு பொருளாக குர்ஆன் அருளப்படவில்லையென்பது உண்மை. அதற்காக குர்ஆனுக்கே எழுத்து அமைப்பில்லை என்று கூறினால் அதை விட வடிகட்டிய மதியீனம் வேறெதுவும் இருக்க முடியாது.

இறைவன் தனது அருள்மறையில் பல்வேறு இடங்களில் பிரயோகிக்கும் குர்ஆன் எனும் சொல் நம்மிடமுள்ள வேதத்தை குறிக்கிறது.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் குர்ஆனுடைய வசனங்கள் பலகைகளிலும், கற்களிலும் எலும்புகளிலும் எழுதி வைக்கப்பட்டன. இவைதான் குர்ஆன் என்றும் அன்று கருதப்பட்டது.

வசனங்கள் எழுதப்பட்ட காகிதமாகவோ அல்லது பலகையாகவோ அருளப்பட்டால்தான் அது குர்ஆன் என்று தமிழகத்து வஹ்ஹாபிகளுக்கு யார் சொல்-க் கொடுத்தது? அவ்வாறு இறக்கி

வைக்கப்பட்டால் தான் தொடுதல் சம்பந்தப்பட்ட சட்டம் வரும் என்று இந்த வஹ்ஹாபிகளுக்கு எங்கிருந்து வஹ்யு வந்தது என்பதையெல்லாம் அவர்களைப் பின்பற்றுகின்ற அப்பாவி இளைஞர்களுக்கு கூற வேண்டிய கட்டாயம் தமிழகத்தின் வஹ்ஹாபிச புரோகிதர்களுக்குண்டு.

عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ عُمَرَ قَالَ نَهٰى رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اَنْ يُسَافَرَ بِالْقُرْآنِ اِلٰى اَرْضِ الْعَدُوِّ

(رواه البخاري ومسلم)

அப்துல்லாஹ் இப்னு உமர் ர-யல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்:

பகைவர் நாட்டிற்கு பயணம் செய்யும் போது குர்ஆன் எடுத்து செல்ல வேண்டாம் என்று இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தடுத்தார்கள்.

நூல்: புகாரீ-எண்: 2768

முஸ்-ம்- எண்: 3474

மேற்கண்ட ஹதீஸில் கூறப்பட்ட குர்ஆன் எனும் சொல் எழுத்து வடிவில் நம் கைகளிலுள்ள வேதத்தையே குறிப்பிட்டுக்காட்டுகிறது, ஒ- வடிவில் அமைந்த குர்ஆனை அல்ல. அது போன்று தூய்மையானவர்தான் குர்ஆனைத் தொட வேண்டும் என்ற நபிமொழியும் நமது கரங்களில் தவழும் குர்ஆனைத்தான் அறிவிக்கிறது.

عَنْ اَنَسٍ رَضِىَ اللّٰهُ عَنْهُ قَالَ : جَمَعَ الْقُرْآنَ عَلٰى عَهْدِالنَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اَرْبَعَةٌ كُلُّهُمْ مِنَ الْاَنْصَارِ اُبَىٌّ وَمُعَاذُ بْنُ جَبَلٍ وَاَبُوْزَيْدٍ وَ زَيْدُبْنُ ثَابِتٍ (رواه البخارى)٣٥٢٦

அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்:-

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் நால்வர் குர்ஆனைத் தொகுத்தார்கள். அவர்களனைவரும் அன்ஸார் தோழர்கள்.

1. உபை (இப்னு கஅப்) ரலியல்லாஹு அன்ஹு
2.முஆத் இப்னு ஜபல் ரலியல்லாஹு அன்ஹு
3. அபூ ஜைத் ரலியல்லாஹு அன்ஹு
4.ஜைத் இப்னு தாபித் ரலியல்லாஹு அன்ஹு

நூல்: புகாரீ- எண்:3526

ஒலி வடிவில் அமைந்த குர்ஆனையா தொகுத்தார்கள் இந்த நான்கு தோழர்களும்? இல்லையே! எழுத்து அமைப்பிலுள்ள குர்ஆனைத் தானே!

குர்ஆனின் வசனங்கள் எழுதப்பட்ட பிரதிகளுக்கு குர்ஆன் என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளதை அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கூற்று அறிவிக்கிறது இதன்மூலம். பரிசுத்தமானவர்கள் தான் குர்ஆனைத் தொட

வேண்டும் என்ற நபி மொழி இப்பிரதிகளுக்குத்தான் என்பதை நன்கறிந்து கொள்ள முடியும்.

இறைவன் கூறினான்:-

إِنَّا أَنْزَلْنَاهُ قُرْآنًا عَرَبِيًّا (يوسف : ٢)

உறுதியாக நாம் இதை அரபி மொழியில் அமைந்த குர்ஆனாக இறக்கி வைத்தோம்.(12-2)

மேலும் இறைவன் சொன்னான்:-

بِلِسَانٍ عَرَبِيٍّ مُبِينٍ (الشعراء : ١٩٥)

தெளிவான அரபி மொழியில் குர்ஆனை ஜிப்ரீல் இறக்கினார்) (26-195)

மேற்கண்ட வசனங்கள் மூலமாக குர்ஆன் அரபிசொற்களால் அமைந்த வேதம் என்பதை இறைவன் அறிமுகம் செய்கிறான். பல எழுத்துக்களின் ஒருங்கிணைப்பே சொற்கள் என்பது நாமறிந்த ஒன்று.

عَنْ أَنَسٍ أَنَّ عُثْمَانَ دَعَا زَيْدَبْنَ ثَابِتٍ وَعَبْدَ اللهِ بْنَ الزُّبَيْرِ وَسَعِيْدَ بْنَ الْعَاصِ وَعَبْدَ الرَّحْمٰنِ بْنَ الْحَارِثِ بْنِ هِشَامٍ فَنَسَخُوْهَا فِي الْمَصَاحِفِ وَقَالَ عُثْمَانُ لِلرَّهْطِ الْقُرَيْشِيِّيْنَ الثَّلَاثَةِ إِذَا اخْتَلَفْتُمْ أَنْتُمْ وَزَيْدُبْنُ ثَابِتٍ فِيْ شَيْءٍ مِنَ الْقُرْآنِ فَاكْتُبُوْهُ بِلِسَانِ قُرَيْشٍ فَإِنَّمَا نَزَلَ بِلِسَانِهِمْ فَفَعَلُوْا ذٰلِكَ.

(رواه البخارى) ٣٢٤٤

அனஸ் ர-யல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்கிறார்கள்:

உத்மான் ர-யல்லாஹு அன்ஹு அவர்கள் (குர்ஆனை தொகுப்பதற்காக) ஜைத் இப்னு தாபித் அப்துல்லாஹ் இப்னு ஜுபைர், சயீத் இப்னு ஆஸ் மற்றும் அப்துர் ரஹ்மான் இப்னு ஹாரித் ர-யல்லாஹு அன்ஹு ஆகியோரை அழைத்து (அந்நால்வரில் குரைஷி குடும்பத்தை சார்ந்த மூவருக்கு சொன்னார்கள்)

குர்ஆனைத் தொகுத்து எழுதும் போது உங்களுக்கும் ஜைத் இப்னுஃதாபித் ர-யல்லாஹு அன்ஹு அவர்களுக்குமிடையில் ஏதாவதொன்றில் கருத்து வேறுபாடு ஏற்பட்டால் குரைஷி மொழியைக் கொண்டு குர்ஆனை எழுதுங்கள்! ஏனென்றால் அவர்கள் மொழியில்தான் குர்ஆன் இறங்கியது.

நூல்: புகாரீ- எண்:3244

عَنْ عَبْدِاللهِ بْنِ مَسْعُوْدٍ قَالَ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ قَرَأَ حَرْفًا مِنْ كِتَابِ اللهِ فَلَهُ بِهِ حَسَنَةٌ وَالْحَسَنَةُ بِعَشْرِ اَمْثَالِهَا لَا اَقُوْلُ الم حَرْفٌ وَلٰكِنْ اَلِفٌ حَرْفٌ وَلَامٌ حَرْفٌ وَمِيْمٌ حَرْفٌ (رواه الترمذى)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:-

யார் குர்ஆனில் ஒரு எழுத்தை ஓதுகிறாரோ அவருக்கு ஒன்றுக்குப் பத்து என்ற அடிப்படையில் நன்மை கிடைக்கும். 'அ-ப் லாம் மீம்' என்பது ஓர் எழுத்தென்று நான் சொல்ல மாட்டேன். மாறாக 'அ - ப்' ஓர் எழுத்து. 'லாம்' ஓர் எழுத்து. 'மீம்' ஓர் எழுத்து.

அறிப்பாளர்-அப்துல்லாஹ் இப்னு மஸ்வுத் ர-யல்லாஹு அன்ஹு

நூல்: திர்மிதி- எண்: 2835.

மேற்கூறப்பட்ட ஹதீஸ்களி-ருந்து குர்ஆன் எழுத்தமைப்பைக் கொண்டது என்பதை புரிந்து கொள்ள முடியும். இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தி-ருந்த எழுத்து வடிவம் இன்றில்லை. மாறுதல் அடைந்திருக்கிறது என்று சிலர் கேட்கக்கூடும். இம்மாறுதலைப் பற்றி நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. இத்தகைய மாற்றங்கள் எல்லா மொழிகளிலும் உண்டு.

எழுத்தின் வடிவங்கள் மாறினாலும் எழுத்துக்கள் அப்படியேதான் உள்ளன. உதாரணத்துக்கு இறைத்தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் இருந்த 'மீம்' என்ற எழுத்து இன்றைக்கும் 'மீம்' ஆக கருதப்படுகிறது. அவர்கள் காலத்தி-ருந்த 'நூன்' இன்றைக்கும் 'நூன்'. அவர்கள் காலத்தி-ருந்த 'ஸீன்' இன்றைக்கும் 'ஸீன்' ஆகவே இருக்கிறது. தோற்றங்கள் மாறியுள்ளன. ஆனால் எழுத்துகள் அப்படியேதான் உள்ளன.

ஒ- வடிவத்தில் மட்டுமே குர்ஆன் இறங்கியது என்று தமிழக வஹ்ஹாபிகள் கூறுகிறார்கள்.ஆனால் இந்த ஒ- வடிவத்திலும் மாற்றம் இருக்கத்தான் செய்கிறதென்பதை யோசிக்க மறந்து விட்டார்கள்.

வஹ்யு-இறைச்செய்தி - வந்த வகைகளை விவரித்த இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சில சமயங்களில் மணியோசையின் ரீங்காரத்தை போன்று வஹ்யு வரும் என்றார்கள்.

நூல்: புகாரீ- எண்:2

ஆனால்,இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருமைத் தோழர்களை அழைத்து அரபி சொற்களில் அமைந்த வசனத்தை ஓதிக்காட்டினார்கள். வஹ்யு வந்தது ஒரு வகை ஒ-. இறைத்தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஓதிக் காண்பித்தது வேறு வகை ஒ-. இவ்விரு ஒ-களும் ஒன்றல்ல.

மேலும், எழுத்து வடிவம் ஒ- வடிவம் இவ்விரண்டும் இறைவனின் பேச்சை அடையாளப்படுத்தும் சாதனங்கள் என்று தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் இறைவனுடைய பேச்சுக்கு எழுத்துகளும் இல்லை, ஒ-யுமில்லை.

குர்ஆனும் ஹதீ ீத் குத்ஸிய்யும் இறைவனுடைய பேச்சுகளென்றாலும் இரண்டுக்கு மத்தியில் வேறுபாடு உண்டு.

ஷ குர்ஆன் :- பொருளும் வார்த்தையும் இறை தரப்பி-ருந்து வந்தது.

ஷ ஹதீ ீத் குத்ஸீ :- பொருள் இறைவனுடையது.

வார்த்தைகள் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குரியன.

எனவேதான், குர்ஆனுடைய வசனத்திற்கு பதிலாக தொழுகையில் ஹதீஸ் குத்ஸியை ஓதினால் தொழுகை கூடாது. அதே போன்றி ஹதீஸ் குத்ஸியை படிக்கும் போது ஒவ்வோர் எழுத்துக்கும் பத்து நன்மை என்பதும் கிடைக்காது.

'அ-ப் லாம் மீம், ஹாமீம், தாஹா மற்றும் தாஸீன்' போன்றவை குர்ஆனில் இடம்பெற்றுள்ளன. இவைகளின் பொருள் நமக்கு தெரியாவிட்டாலும். இவை குர்ஆனில் உள்ளவை என நம்புவது கட்டாயமாகும். காரணம், இவ்வெழுத்துகள் இறைவனிடமிருந்து வந்தவை என்பதுதான்.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தி-ருந்த குர்ஆன்- சஹாபா பெருமக்கள் காலத்தில் ஒன்றுதிரட்டப்பட்ட குர்ஆன்- பகைவருள்ள ஊருக்கு கொண்டு செல்ல கூடாது என்று தடை செய்யப்பட்ட குர்ஆன்- இவை எல்லாமே எழுத்து வடிவம் கொண்டவையே. பரிசுத்தமானவரே குர்ஆனைத் தொட வேண்டுமென்று இறைத்தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆணையிட்டதும் அக்குர்ஆனுக்கே.

குர்ஆனின் கண்ணியத்தை சிதைக்க முற்படும் வஹ்ஹாபிகள் இதற்குப் பின்னரும் அடம்பிடித்தால் நாம் முன் வைக்கிற கேள்விக்கு பதிலளிக்க வேண்டும்.

காகிதத்திலோ அல்லது பலகையிலோ குர்ஆனுடைய வசனங்கள் எழுதப்பட்ட நிலையில் இறை வேதம் இறங்கியிருந்தால்தான் தொடுதல் சம்பந்தப்பட்ட சட்டம் வரும் என்று கூறும்

வஹ்ஹாபிகள் இக்கருத்தை எங்கிருந்து பெற்றார்கள் என்பதை விளக்க வேண்டும்.

குர்ஆன் ஹதீஃதி-ருந்து பெற்றார்ளென்றால் அவையென்ன என்பதை கூற வேண்டும். ஆனால் மறுமை நாள் வரை முடியாது. காரணம் இவர்கள் கூறும் இக்கருத்து குர்ஆனிலும் இல்லை. ஹதீஃதிலும் இல்லை. இருந்தால்தானே காட்டுவதற்கு!. அல்லது இவர்களுக்கு 'வஹ்யு' வந்ததா? அவ்வாறு வந்திருந்தால் எங்கிருந்து வந்தது? யார் கொண்டு வந்தது? என்பதையெல்லாம் தெளிவுபடுத்த வேண்டும். ஆனால், எங்கே தெளிவு படுத்தப் போகிறார்கள்? அவர்கள்தான் குதிகால் பிடரியிலடிக்க ஓடுகிறார்களே.

முடிவுரை

இதுவரை........

இந்நூ-ல் இதுவரை நாம் தெரிந்து கொண்டவை-

☐ பரிசுத்தமானவர்கள் தான் குர்ஆனைத் தொட வேண்டுமென்பதற்கான அடுக்கடுக்கான சான்றுகள்.

☐ இதற்கு முரணாக வஹ்ஹாபிய முல்லாக்களால் எழுப்பப்பட்ட வினாக்கள் மற்றும் கூறப்பட்ட கருத்துகள்.

☐ வஹ்ஹாபிகளின் ஆட்சேபனைகளுக்கு சுன்னத் வல் ஜமாஅத் தரப்பில் அளிக்கப்பட்ட விடைகள் மற்றும் தெரிவிக்கப்பட்ட விளக்கங்கள்.

இதி-ருந்து.......

மேற்கண்டவையி-ருந்து நாம் தீர்க்கமாக தெரிந்து கொண்டவை.

1. தூய்மையானவர்கள் தான் குர்ஆனைத் தொட

வேண்டும்மென்பதற்கான சான்றுகளே வலுவானவை.

2. குர்ஆனைத் தொடுவதற்கு சுத்தம் அவசியமில்லை என வாதிக்கும் தமிழக வஹ்ஹாபிகளின் ஆதாரங்களும் அவர்கள் எழுப்பிய ஆட்சேபனைகளும் ஏற்கத்தக்கவையல்ல.

3. பரிசுத்தமானவரே குர்ஆனைத் தொட வேண்டுமென்பதற்கு குர்ஆனி-ருந்தும் ஹதீ ீதி-ருந்தும் நேரிடைச் சான்றுகள் முன் வைக்கப்பட்டன.

ஆனால் சுத்தம் தேவையில்லை என வாதிடும் வஹ்ஹாபிச புரோகிதர்களால் குர்ஆன் மற்றும் ஹதீ ீதி-ருந்து நேரிடையான ஆதாரங்களைக் கொண்டு வர இயலவில்லை. சுற்றி வளைத்துத் தான் மூக்கைத் தொடுகிறார்கள்.

4. ஒரு விஷயத்தில் ஹராமா? இல்லையா? எனும் பிரச்சனை எழுகின்ற போது ஹராம் என்ற நிலையைத் தேர்ந்தேடுப்பதே மார்க்கத்தில் பேணுதலைத் தரும். பழிப்பி-ருந்து பாதுகாப்பையும் அளிக்கும்.

5. தூய்மையில்லாமல் குர்ஆனைத் தொடக்கூடாது என்ற கருத்தே குர்ஆனின் மகிமைக்கும் மாண்புக்கும் ஏற்ற வகையில் அமைந்துள்ளது. இவ்வேதம் புனிதமானது, பரிசுத்தமானது என்றெல்லாம் இறைவன் குர்ஆனிலே புகழ்ந்து பேசுவதை கவனத்தில் கொண்டு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அப்போது குர்ஆனைத் தொடுவதற்கு தூய்மை அவசியமென்ற சட்டமே இறைவேதத்தின் கண்ணியத்தைக் காக்கிறது என்று அறிய முடியும். சுத்தம் தேவையில்லை என்ற சட்டமோ இறை வேதத்தின் மாண்பை சிதைக்கிறதென்றும் புரிந்து

கொள்ள முடியும்.

இமாம் மா-க் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்.-

சுத்தமில்லாதவன் குர்ஆனை சுமந்து செல்லக் கூடாது. குர்ஆனுள்ள பை மற்றும் உறைகளுக்கும் இச்சட்டம் பொருந்தும். தூய்மையில்லாதவன் குர்ஆனைத் தொட்டால் அது அழுக்காகிவிடும் என்பதற்காக இச்சட்டமென்று யாரும் கருதி விடக் கூடாது. சுத்தம் தேவை என்பதற்குண்டான காரணி குர்ஆனுக்குரிய கண்ணியத்தையும் மாண்பையும் அளிப்பதுவே.

நூல்: அல்ஜாமிவு -அஹ்காமில் குர்ஆன் (17 - 227)

ஆசிரியர்: இமாம் குர்துபீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள்

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குர்ஆனின் கண்ணியம் காப்பாற்றப்பட வேண்டும்மென்பதில் அதிக அக்கறை செலுத்தியுள்ளார்கள். அதற்கு ஆதாரம்-

பகைவர் உள்ள பகுதிக்கு பயணம் செய்யும் போது குர்ஆனை எடுத்துச் செல்ல வேண்டாமென்று இறைத்தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தடுத்தார்கள்.

அறிவிப்பாளர்- அப்துல்லாஹ் இப்னு உமர் ர-யல்லாஹு அன்ஹு அவர்கள்

நூல்:புகாரீ- எண்: 2768

முஸ்-ம்- எண்: 3474

6. குர்ஆனைத் தொடுவதற்கு சுத்தம் தேவையென்ற நிலைப்பாடுதான் இறைத்தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்திலும் அதற்கு

பின்னருமிருந்தது என்ற தகவல் நபித் தோழர்களின் வழியாக கிடைத்துள்ளது.

இவ்விஷயத்தில் நபித் தோழர்களுக்கு மத்தியில் எந்த கருத்து வேறுபாடும் இருந்ததில்லை. போற்றுதலுக்குரிய நாற்பெரும் இமாம்களும் சுத்தம் தேவையென்பதையே சட்டமாக்கியுள்ளனர்.

இமாம் இப்னு அப்தில் பர்ர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்:-

இஸ்லாமிய தலைநகரங்களில் மார்க்கத்தீர்ப்பு- ஃபத்வா- வழங்கிய அனைத்து அறிஞர்களும் சுத்தமில்லாமல் குர்ஆனைத் தொடக்கூடாதென்பதில் ஒருமித்த கருத்து கொண்டிருந்தனர்.

நூல்: இஸ்தித்கார் 8-10

வஹ்ஹாபிகளால் சிறந்த அறிஞரென போற்றப்படுகின்ற இப்னுதைமியா சொல்கிறார்:-

குர்ஆனைத் தொடுதல் சம்பந்தமான சட்டங்களில் மிகச் சரியானது குர்ஆனைத் தொடுவதற்கு உளூ அவசியம் என்பது தான். பெரும்பான்மை அறிஞர்களின் கூற்றும் இப்படித்தானிருந்தது. சஃது, ஸல்மான் மற்றும் இப்னு உமர் ர-யல்லாஹு அன்ஹு அவர்கள் ஆகியோர் போன்ற நபித்தோழர்கள் வழியாக அறியப்பட்ட செய்தியும் இதுவே.

நூல் - மஜ்மூவு ஃபதாவா இப்னிதைமியா - (21 - 288)

ஒருவன் உண்மை இஸ்லாமியனாகயிருந்தால் அவன் நபித் தோழர்களின் ஒருமித்த கருத்தையே தேர்ந்தெடுப்பான். அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்று குர்ஆன் பணிக்கிறது (9 - 100) ஆகவே, அவர்களைப்பின் தொடர மறுப்பவன் இறைவேதம்

குர்ஆனையே புறக்கணித்தவன் ஆவான்.

மறுமை வெற்றியை ஒருவன் குறிக்கோளாகக் கொண்டிருந்தால் தாபியீன்களைச் சார்ந்த மார்க்க விற்பன்னர்களும் அதன் பின்னர் வந்த போற்றுதலுக்குரிய இமாம்களும் வழங்கிய தீர்ப்பை அவன் எடுத்துக் கொள்வான்.

நபித் தோழர்கள் தாபியீன்கள் மற்றும் இமாம்கள் இவர்களனைவரின் கருத்தும் குர்ஆனைத் தொடுவதற்கு உளூ அவசியம் என்பதுவே.

பின்குறிப்புகள்-

குறிப்பு - 1

குளிப்பு கடமைநிலையில் உள்ளோரும், மாதவிடாய் பெண்களும், பிள்ளை பேறு உதிரப் போக்குள்ள பெண்களும் குர்ஆன் ஓதுதல் என்ற எண்ணமில்லாமல் திக்ர் அல்லது பிரார்த்தனை என்கின்ற அடிப்படையில் குர்ஆனுடைய வசனத்தை ஓதுவது மார்க்கத்தில் அங்கீகரிக்கப்பட்டதாகும்.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பகர்ந்தார்கள் :

عَنْ عُمَرَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اِنَّمَا الْاَعْمَالُ بِالنِّيَاتِ (رواه البخارى)

"உறுதியாக செயல்களனைத்தும் எண்ணங்களைப் பொருத்ததாகும்."

அறிவிப்பாளர்-உமர் ர-யல்லாஹு அன்ஹு

நூல்: புகாரீ- எண்: 1

இந்த நபிமொழியின்படி திக்ருடைய நிய்யத்தில் குர்ஆன் வசனத்தைக் கூறுவது கூடும். ஏனென்றால், குர்ஆன் ஓதுவதற்கும் திக்ர் செய்வதற்கும் மத்தியில்

நிறைய வேறுபாடுகளுண்டு. குர்ஆன் ஓதினால் ஒவ்வோர் எழுத்திற்கும் பத்து நன்மைகள் கிடைக்குமென்று இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

நூல்: திர்மிதி- எண்: 2835

குர்ஆன் ஓதுவதால் ஒவ்வொரு எழுத்திற்கும் கிடைக்கிற பத்து நன்மைகள் திக்ர்- பிரார்த்தனை செய்யும்போது கிடைப்பதில்லை. திக்ர் மற்றும் பிரார்த்தனையில் ஈடுபடுகின்ற போது அதற்குரிய நன்மைகள் நமக்கு உறுதியாக கிடைக்கும். அதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆனால், ஒரு எழுத்துக்கு பத்து என்ற அமைப்பில் குர்ஆன் ஓதுவதற்குரிய நன்மைகள் இவற்றிற்கில்லை.

உதாரணமாக "ஐய்த்" என்ற மூவெழுத்துள்ள சொல் குர்ஆனில் இடம்பெறுகிறது. இது ஒரு நபித்தோழரின் பெயர். ஒரு பெயர் என்ற வகையில் இச்சொல்லை நாம் பிரயோகித்தால் இதற்கு நன்மை எதுவுமில்லை. அதே நேரத்தில் குர்ஆன் ஓதிக்கொண்டிருக்கும் போது இவ்வார்த்தையை மொழிந்தால் ஒன்றுக்கு பத்து என்ற கணக்கில் முப்பது நன்மைகள் நமக்கு கிடைத்து விடுகின்றன. 'இறைவன் மன்னிப்பாளன்' என்ற பொருளில் 'ஙீபூர்' என்ற வார்த்தையை சொன்னால் திக்ர் செய்த-ன் நன்மை கிடைக்கும். குர்ஆன் ஓதும் போது இச்சொல்லை நாம் கூறினால் ஒன்றுக்கு பத்து என்ற அடிப்படையில் நாற்பது நன்மைகள் கிடைக்கும்.

வார்த்தை ஒன்றுதான். ஆனால் திக்ர் செய்யும் போது ஒரு வகை நன்மையையும் குர்ஆன் ஓதும் சமயத்தில் வேறுவகை நன்மையையும்

பெற்றுத்தருகிறது. இதி-ருந்து எண்ணங்களைப் பொருத்தே நடவடிக்கைகள் இறைவனிடம் கவனிக்கப்படுகின்றன என்பதை நன்கறிந்து கொள்ள முடியும்.

عَنِ ابْنِ عُمَرَ اَنَّ رَسُوْلَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ كَانَ اِذَا اسْتَوٰى عَلٰى بَعِيْرِهِ خَارِجًا اِلٰى سَفَرٍ كَبَّرَ ثَلَاثًا ثُمَّ قَالَ سُبْحَانَ الَّذِيْ سَخَّرَلَنَا هٰذَا وَمَا كُنَّالَهُ مُقْرِنِيْنَ وَاِنَّا اِلٰى رَبِّنَا لَمُنْقَلِبُوْنَ (رواه مسلم والترمذي وابو داؤد واحمد والدارمى)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பயணம் புறப்படுவதற்காக ஒட்டகைமீது அமர்ந்துவிட்டால் மும்முறை "அல்லாஹு அக்பர்" என்று கூறுவார்கள். பிறகு "ஸுப்ஹானல்லதீ சஹ்ஹரலனா ஹாதா வமாகுன்னா லஹு முக்ரினீன். வஇன்னா இலா ரப்பினா ல முன்க-பூன்.(இதை எங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்த(இறை)வன் தூய்மைமிக்கவன். நாங்கள் இதை(அடக்கிப் பயன்பெற) இயலாதவர்களாக உள்ளோம். மேலும், நாங்கள் எங்கள் இறைவனிடமே திரும்பக் கூடியவர்களாக இருக்கிறோம்)" என்று கூறுவார்கள்.

அறிவிப்பாளர்-இப்னு உமர் ர-யல்லாஹு அன்ஹு
நூல்: முஸ்-ம்- எண்: 2392
திர்மிதீ-எண்: 3369
அபூதாவூத்- எண்: 2232

அஹ்மத்- எண்: 6086
தாரமீ- எண்: 2557

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய ஸுப்ஹான.... எனத் தொடங்கும் வாசகங்கள் சுக்ருப் -அத்தியாயத்தின் 13-ம் வசனத்தின் ஒரு பகுதியாவும் 14-ம் வசனமாகவும் இடம் பெற்றுள்ளன. எனினும் பயணி குளிப்பு கடமையான நிலையி-ருந்தாலும் அப்பயணி பெண்ணாக இருப்பின் மாதவிடாய் நிலையி-ருந்தாலும் இவற்றைக் கூறலாம். அதற்கு எத்தடையுமில்லை. காரணம், பயணப் பிரார்த்தனை என்பது தான் இங்கு நோக்கமே தவிர குர்ஆன் ஓதுதல் என்பதல்ல.

அதே போன்று ஒரு செயலைத் தொடங்கும் போது

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்)

என்று கூறுகிறோம். இது குர்ஆனிலுள்ள ஒரு வாசகம். ஒரு செயலைத் தொடக்கம் செய்பவர் குளிப்பு கடமை நிலையி-ருந்தாலும் பெண்களாக இருந்தால் மாதவிடாய் அல்லது பேறு கால உதிரப் போக்கு நிலையி-ருந்தாலும் இதைக் கூறுவது கூடும். ஏனென்றால், செயல் தொடக்கப் பிரார்த்தனை என்ற நோக்கில் தான் இதைக் கூறப்படுகிறது. குர்ஆன் ஓதுதல் என்ற எண்ணத்திலல்ல. ஆகவே இதைக் கூற எத்தடையும் மார்க்கத்தி-ல்லை.

குறிப்பு-2

சுத்தமில்லாமல் குர்ஆனைத் தொடக் கூடாது என்ற சட்டம் குர்ஆன் எழுத்து வடிவில் உள்ள போது தான் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறில்லையானால் அச்சட்டமுமில்லை.

குர்ஆனை மனனம் செய்த ஹாபிழ்கள் குர்ஆன் பதிவு செய்யப்பட்ட ஒ--ஒளிப் பேழைகள் மற்றும் குறுந்தகடுகளை உளூ இல்லாமல் தொடுவதற்கு மார்க்கம் அனுமதிக்கிறது. காரணம் அவற்றில் குர்ஆன் எழுத்து வடிவில் தென்படவில்லை.

குர்ஆன் ஓதினால் ஓர் எழுத்திற்கு பத்து நன்மை கிடைக்குமென்பது கூட எழுத்து வடிவில் மொழிந்தால்தான். குர்ஆன் வசனங்களை மனதால் நினைப்பவருக்கு அந்த நன்மையில்லை என்பது நாமறிந்ததே. வெளியில் தெரிகின்ற எழுத்தின் சட்டம் மனதில் அல்லது ஒளி நாடாவில் அல்லது குறுந்தகடில் மறைந்துள்ள எழுத்திற்குக் கிடையாது. அதற்குச் சான்றாக ஒன்றைக் குறிப்பிடுவது இங்கே பொருத்தமாகும். கழிவரைக்குச் செல்பவன் இறைநாமம் பொரித்த மோதிரம் அணிந்திருந்தால் அதை கழற்றி விட்டுத் தான் செல்ல வேண்டும்.

عَنْ اَنَسٍ قَالَ كَانَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اِذَا دَخَلَ الْخَلَاءَ وَضَعَ خَاتَمَهُ (رواه ابوداؤد والترمذي والنسائي وابن ماجه)

அனஸ் ர-யல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்:

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கழிவறை செல்லும் போது தனது மோதிரத்தை கழற்றி வைத்து விடுவார்கள்.

நூல்: அபூதாவூத்- எண்: 18
திர்மிதீ- எண்: 1668

நசாயீ- எண்: 5118

இப்னு மாஜா- எண்: 299

அம்மோதிரத்தில் இறைநாமம் பொரிக்கப் பட்டிருந்ததை கீழ்க்காணும் ஹதீ்த் தெரிவிக்கிறது.

عَنْ اَنَسِ بْنِ مَالِكٍ قَالَ لَمَّا اَرَادَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اَنْ يَكْتُبَ اِلَى الرُّوْمِ قَالُوْا اِنَّهُمْ لَا يَقْرَؤُوْنَ كِتَابًا اِلَّا مَخْتُوْمًا فَاتَّخَذَ خَاتَمًا مِنْ فِضَّةٍ كَاَنِّيْ اَنْظُرُ اِلٰى وَبِيْصِهِ وَنَقْشُهُ مُحَمَّدٌ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ (رواه البخاري ومسلم)

இறைத்தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரோம் நாட்டிற்கு (கடிதம்) எழுத நாடியபோது ரோம் மக்கள் முத்திரையிடப்பட்ட கடிதத்தைதான் படிப்பார்களென நபித்தோழர்கள் கூறினார்கள். ஆகவே வெள்ளியால் ஆன ஒரு மோதிரத்தை இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தயார் செய்தார்கள். அதன் வெண்மையை நான் பார்த்தேன். அம்மோதிரத்தில் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்று பொரிக்கப்பட்டிருந்தது.

அறிவிப்பாளர்- அனஸ் ர-யல்லாஹு அன்ஹு

நூல்: புகாரி- எண்: 6629

முஸ்-ம்- எண்: 3902

இறைவனுடைய திருநாமம் எழுத்துவடிவில் மோதிரத்தில் பதியப்பட்டிருந்ததால் கழிவரை செல்கின்றபோது கழற்றிவைத்துவிட வேண்டுமென மார்க்கம் பணிக்கிறது. கண்களுக்குத் தெரியும்

வகையில் உள்ளதால் இந்தச் சட்டம்.

இதே நேரத்தில் மோதிரம் அணியாமல் கழிவரை செல்கின்ற இறைநம்பிக்கையாளரின் உள்ளத்தில் இறை நாமம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அது மறைந்துள்ளதால் அவருக்கு இச்சட்டமில்லை. எனவே, அவர் கழிவரை செல்வதற்கு தடையில்லை.

குறுந்தகடுகளை கணினியில் போட்டுப் பார்க்கின்ற போது குர்ஆன் எழுத்துக்கள் மட்டும் தெரிந்தால் குர்ஆனின் சட்டம் அக்கணினிக்கு பொருந்தும். உளூவுடனேயே அக்கணிணியைத் தொட வேண்டும். ஆனால் குர்ஆன் எழுத்துக்களோடு மொழி பெயர்ப்பு அல்லது விரிவுரை ஆகியவை சேர்த்துத் தெரிந்தால் குர்ஆனுக்குரிய சட்டம் இதற்கில்லை. உளூ இல்லாமலேயே இதைத் தொடலாம்.

குறிப்பு-3

பரிசுத்தமானவர்களே தொட வேண்டுமென்பது குர்ஆனுக்கு மட்டுமே உரிய சட்டமாகும். எனவே,

-ஹதீஃத் நூற்கள்

- பிரார்த்தனைப் புத்தகங்கள்

-ஃபிக்ஹ் கிரந்தங்கள்.

-குர்ஆன் மொழிபெயர்ப்பு தர்ஜமாக்கள்

-குர்ஆன் விரிவுரை தஃப்ஸீர்கள்.

-அவ்ராத் தொகுப்புகள்.

-மற்றும் மவ்-த் கிதாபுகள்.

ஆகியவற்றைத் தொடுவதற்கு உளூ கட்டாயம் அல்ல. அவற்றில் குர்ஆன் வசனங்கள் எழுதப்பட்டிருந்தாலும் உளூ இன்றி தொடுவது கூடும்.

ஏனெனில் இவற்றிக்கு குர்ஆன் என்று கூறப்படாது.

ஆனாலும் மேற்கண்ட நூல்களைத் தொடுவதற்கு உளூ செய்து கொள்வது மார்க்கத்தில் வரவேற்கத்தக்க மற்றும் புகழுக்குரிய செயலாகும்.

குளிப்பு கடமையானவர்கள், மாதவிடாய் பெண்கள் மற்றும் பேறுகால உதிரப் போக்குள்ள பெண்கள் ஓதக்கூடாதென்ற சட்டம் குர்ஆனுக்கு மட்டுமே. இச்சட்டம் மற்ற நூல்களுக்கில்லை. எனவே இத்தகையவர்கள் மேற்கண்ட கிதாபுகள்- கிரந்தங்கள்- தர்ஜமாக்கள்-தஃப்ஸீர்கள்-தொகுப்புகள் மற்றும் புத்தகங்களைத் தொடுவது கூடும் என்பது போலவே ஓதுவதும் கூடும்.

குறிப்பு-4

அரபி மொழியில் மட்டும் அமைந்த மூல நூலான குர்ஆனை இறைமறுப்பாளர்கள் தொடக்கூடாதென்ற காரணியால் குர்ஆன் அச்சடிக்கப்படுகிற அச்சகங்களில் இறைநம்பிக் கையாளர்களை மட்டுமே பணியில் அமர்த்த வேண்டும். குர்ஆனைத் தொடும் வாய்ப்புள்ள பணியாளர்கள் பணியின் போது உளூவுடனிருக்க வேண்டும்.

இதைவிடுத்து, குர்ஆன் அச்சகங்களில் பணியாற்றுவோரெல்லாம் தூய்மையாகவா இருக்கிறார்கள்? என்ற கேள்வியைக் கேட்டு, இல்லையே எனவே குர்ஆனைத் தொடுவதற்கு சுத்தம் தேவையில்லை என்ற பதிலையும் கூறி வஹ்ஹாபிகள் தங்களின் மார்க்க அறியாமையை வெளிப்படுத்தக் கூடாது. குர்ஆன் - ஹதீஃத் இவ்விரண்டும்தான் மார்க்கமே தவிர அச்சகங்களின் நடவடிக்கைகளல்ல.

குறிப்பு-5

உளூ இன்றி குர்ஆனைத் தொடக்கூடாது. அது போன்று குர்ஆன் வைக்க மட்டும் பயன்படுத்துகின்ற பெட்டி ரேஹா- பலகை போன்றவைகளையும் அவற்றில் குர்ஆன் இருக்கும் போது உளூ இல்லாமல் தொடக்கூடாதென்பது ஷாஃபிஈ மத்ஹபின் சட்டம். அவற்றை குர்ஆன் இல்லாத நிலையில் தொடுவதற்கு தடையில்லை.

இறைவேதம் குர்ஆன் புனிதமானது அது போல குர்ஆன் உள்ள இடமும் புனிதமானது என்பது இமாம் ஷாஃபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் கருத்து. ஏனென்றால், மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் 'தூர் ஸீனா' மலைக்கு வேதத்தைப் பெறுவதற்காக வருகை தந்த போது இறைவன் கூறினான்:-

اِنِّىْٓ اَنَا رَبُّكَ فَاخْلَعْ نَعْلَيْكَ اِنَّكَ بِالْوَادِ الْمُقَدَّسِ طُوًى

(طه: ١٢)

(மூஸாவே) உறுதியாக நானே உங்கள் இறைவன். ஆகவே, உங்கள் இரு காலணிகளையும் கழற்றுங்கள் திண்ணமாக நீங்கள் 'துவா' என்ற தூய்மையான பள்ளத்தாக்கில் உள்ளீர்கள்.(20-12)

வேதம் மட்டுமல்ல, வேதம் இறங்குகிற இடமும் தூய்மையானதுதான் என்பதை இவ்வசனத்தின் மூலம் இறைவன் தெளிவுபடுத்துகிறான்.

குர்ஆன் உள்ள பொருளையும் உளூ இல்லாமல் தொடக் கூடாதென்றால், 'கரண்ட் பாஸ் ஆகுதா' என்று கேட்டு குர்ஆன் விளக்கமில்லாத வஹ்ஹாபிகள் கே- பேசுகிறார்கள், குர்ஆன்-ஹதீஃதைப் புரியாத

வஹ்ஹாபிகள் மத்ஹப் இமாம்களை கிண்டல் செய்யவில்லை, இப்படியொரு கேள்வியை எழுப்பி படைத்த இறைவனையே கே- செய்கிறார்கள். ஏனென்றால், வேதம் இறங்குமிடமும் தூய்மையானது என்று இறைவன் தான் குர்ஆனில் சொல்-க் காட்டினான்.

'கரண்ட பாஸ் ஆகுதா' என்று இறைவனைப் பார்த்தே கேள்வி கேட்க புறப்பட்டிருக்கும் இந்த வஹ்ஹாபிகளை அந்த இறைவன்தான் காப்பாற்ற வேண்டும்.

குறிப்பு - 6

குர்ஆனை மட்டும் ஒரு பெட்டியில் வைத் தூக்கிக் செல்வதென்றால் உளூவுடனேயே அப்பெட்டியைத் தொடவேண்டும். அதே சமயம் மற்ற பொருட்களுடன் குர்ஆனுமுள்ள பெட்டியை உளூ இன்றி சுமந்து செல்ல மார்க்கத்தில் அனுமதி உண்டு,

ஏனெனில் இவ்விரு நிலைகளுக்கும் வேறுபாடுள்ளது. ஒருவன் மற்ற பொருட்களுடன் குர்ஆனையும் எடுத்துச் செல்கின்றபோது அவனது எண்ணம் ஒட்டுமொத்த பொருட்கள் என்பதுதானே தவிர குர்ஆன் மட்டும் என்பதல்ல.

குர்ஆனை தனித்து எடுத்துச்சென்றால் அவனது நோக்கமே குர்ஆன் தான், எண்ணங்களைப் பொருத்தே நமது மார்க்கத்தில் சட்டங்கள் அமையும்,

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்÷

'*செயல்களனைத்தும் எண்ணங்களைப் பொருத்ததே*'

அறிவிப்பாளர் : உமர் ரழியல்லாஹு அன்ஹு

நூல் : புகாரீ - எண் 1

ஒரு கேள்வி -

இந் நூ-ல் கூறபட்டுள்ள ஹதீஸ்த்களில் சில பலவீனமானவை என வஹ்ஹாபிகள் கூறினால் அவர்களுக்கு நாம் விடுக்கும் கேள்வி :

வஹ்ஹாபிகளே! பலவீனமான ஹதீஸை சான்றாக அமைத்து ஏன் தொழுகையில் நெஞ்சின் மீது கைகட்டுகிறீர்கள்? அந்த பலவீனமான ஹதீஸ்த் இதுதான்:

حَدَّثَنَا يَحْيَىٰ بْنُ سَعِيدٍ عَنْ سُفْيَانَ حَدَّثَنِي سِمَاكٌ عَنْ قَبِيصَةَ بْنِ هُلْبٍ عَنْ اَبِيهِ قَالَ رَأَيْتُ النَّبِيَّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَنْصَرِفُ عَنْ يَمِينِهِ وَعَنْ يَسَارِهِ وَرَأَيْتُهُ قَالَ يَضَعُ هٰذِهِ عَلَىٰ صَدْرِهِ (رواه احمد)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வலது பக்கமும் இடது பக்கமும் திரும்பும் போது பார்த்தேன், (தொழுகையில்) நெஞ்சின் மீது இக்கையை வைப்பதையும் பார்ததேன்,

அறிவிப்பாளர் - ஹுல்ப் ரழியல்லாஹு அன்ஹு

நூல்: அஹ்மத்-எண்: 20961

இந்த ஹதீதின் அறிவிப்பாளர் வரிசையில் சிமாக் என்பவர் வருகிறார். இவரைப்பற்றி ஹதீஸ்த் கலை வல்லுனர்கள் பல்வேறு கருத்துக்களை கூறியுள்ளனர், நம்பகமானவரென்று நிறையை மட்டுமே கூறியவர்களுமுண்டு, இவ்வாறு

கூறியவர்கள் எண்ணிக்கையில் மிகமிக சொற்பமானவர்கள், இவருடைய குறை-நிறை

இரண்டையும் கூறியவர்களும் இருக்கிறார்கள், இவர்களும் குறைந்த எண்ணிக்கையில் உள்ளவர்களே, சிமாக் பலவீனவர், அவருடைய ஹதீஸை ஆதாரமாக ஏற்கக்கூடாது என்று குறைமட்டுமே சொன்ன ஹதீஸ் கலை அறிஞர்கள்தான் ஏராளம்,

நிறை கண்டோர்

١ . قال ابو حاتم صدوق ثقة

1. சிமாக் உண்மையாளர், நம்பத்தகுந்தவர்
-அபூஹாதிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி

குறை நிறை கண்டோர்

١ . قال يعقوب بن شيبة قلت لابن المديني رواية سماك عن عكرمة فقال مضطربة

1. இக்ரிமா வழியாக சிமாக் அறிவிப்பது தடுமாற்றமுள்ளதாகும்.
- இப்னுல் மதீனீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٢ . قال يعقوب وروايته عن عكرمة خاصة مضطربة وهو في غير عكرمة صالح وليس من المتثبتين.

2. இக்ரிமா வழியாக சிமாக் அறிவித்த ஹதீஸ் மட்டுமே தடுமாற்றத்திற்குரியது. மற்றவர் வழியாக அவர் அறிவித்தவை நல்லவை. ஆனால் சிமாக் உறுதியான நிலைப்பாட்டுக்குரியவரல்ல.
-யாகூப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٣ . قال العجلي بكري جائز الحديث الاانه كان فى حديث عكرمة ربما وصل الشيئ

3. சிமாக் அறிவிக்கும் ஹதீஸை ஏற்று கொள்ளலாம்.ஆனால் இக்ரிமா வழியாக அவர் அறிவிப்பதை ஒப்புக் கொள்ளக் கூடாது. காரணம், இக்ரிமா கூறியதை (இப்னு அப்பாஸ் ர-யல்லாஹுஅன்ஹு அவர்கள்) சொன்னதாக அறிவித்துவிடுவார்.

- இஜ்லீ பக்ரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٤. قال النسائي ليس به بأس وفي حديثه شيئٌ

4. சிமாக் என்பவர் பரவாயில்லை என்று சொல்லத்தக்கவரே. அவர் அறிவிக்கும் ஹதீஸில் பலவீனமுண்டு.

-நசாயீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٥. قال ابن عدى احاديثه حسان وهو صدوق لابأس به

5. சிமாக் அறிவிக்கும் ஹதீஸ்கள் அழகானவை. ஆனால் அவர் பரவாயில்லை என சொல்லதக்க உண்மையாளர்.

- இப்னு அதீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٦. قال ابن ابي خيثمة سمعت ابن معين سئل عنه ماالذي عابه قال اسند الاحاديث لم يسندها غيره وهو ثقة

6. சிமாக் நம்பகமானவர். ஆனால் யாருமே அறிவித்திராத நபரின் வழியாகவெல்லாம் ஹதீஸை அறிவிக்கும் குறைபாடு இவரிடமுண்டு.

-இப்னு மஈன் ரஹ்மத்துல்லாஹி அலைஹி

குறை கண்டோர்

١. قال ابوطالب عن احمد مضطرب الحديث

1.சிமாக் ஹதீஸ் அறிவிப்பதில் தடுமாற்ற

முடையவர்

-அஹ்மத் இப்னு ஹன்பல் ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٢ . قال ابن عمار يقولون انه كان يغلط ويختلفون في حديثه

2. சிமாக் ஹதீஸ் அறிவிப்பதில் தவறிழைப்பார். அவர் அறிவிக்கும் ஹதீஸ் ஏற்றுக் கொள்வதில் ஹதீஸ் கலை அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர்.

-இப்னு அம்மார் ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٣ . قال زكريا بن عدي عن ابن المبارك سماك ضعيف في الحديث

3. சிமாக் பலவீனமானவர்.

-அப்துல்லாஹ் இப்னு முபாரக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٤ . قال صالح جزرة يضعف

4. சிமாக் பலவீனமுள்ளவர்.

-ஸாலிஹ் ஜஸ்ரா ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٥ . قال ابن خراش في حديثه لين

5. சிமாக் ஹதீஸ் தில் பலவீனமுண்டு.

- இப்னு கிர்ராஷ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٦ . قال ابن حبان في الثقات يخطئ كثيرا

6.ஹதீஸ் அறிவிப்பதில் சிமாக் அதிகம் தவறு செய்வார்.

٧. قال جرير بن عبد الحميد اتيته فرأيته يبول قائما فرجعت ولم اسأله عن شيئ

7.நான் சிமாகிடம் வரும் போது அவர் நின்ற வண்ணம் சிறுநீர் கழிப்பதைப் பார்த்தேன். அவரிடம் எதுவும் கேட்காமல் திரும்பிவிட்டேன்.

-ஜரீர் இப்னு அப்தில் ஹமீத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி.

٨. كان شعبة يضعف

8.சிமாக் பலவீனமானவர்.

-ஷுஃபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி

٩. كان الثوري يضعف بعض الضعف

9. சிமாக் சிறிது பலவீனமுள்ளவர்.

-சுஃப்யான் தவ்ரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி

(تهذيب التهذيب لابن حجر العسقلاني : ٤/٢٠٤ - ٢٠٥)

நூல்: தஹ்தீபுத் தஹ்தீப் 4-(203,205)

ஆசிரியர்-இப்னு ஹஜர் அஸ்கலானீ ரஹ்மத் துல்லாஹி அலைஹி

இமாம் தகபீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களுக்குரிய மீஜானுல் இஃதிதால் எனும் நூ-ல் கீழ்க்காணும் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

قال النسائي اذا انفرد باصل لم يكن حجة

சிமாக் தனித்து அறிவிக்கும் ஹதீஃத் சான்றாக அமையாது.

قال عبدالله بن احمد بن حنبل قرأت بخط ابي عن رجل لم يسمه قال : كان سماك بن حرب فصيحا يزين الحديث بمنطقه وفصاحته

சிமாக் இலக்கிய நயத்தோடு பேசுபவர். தனது பேச்சாற்றல் மற்றும் இலக்கியப் புலமையின் மூலம் ஹதீஸை அழகு படுத்தும் வழமையுள்ளவர்.

-அஹ்மத் இப்னு ஹன்பல் ரஹ்மத்துல்லாஹி அலைஹி

பாகம்-2 பக்கம்-232

ஹதீஸ் கலை அறிஞர்களில் பலர் சிமாகை குறைகண்டிருக்க ஓரிரு அறிஞர்களின் கருத்தை மட்டும் எடுத்துக் கொண்டு அரபி ஞானம் தெரியாத அப்பாவி இளைஞர்களை ஏமாற்றி நெஞ்சின் மீது கைகட்ட வைத்து அவர்களின் வணக்க வழிபாடுகளை பாழடித்துக் கொண்டிருக்கிறார்கள் வஹ்ஹாபிச முல்லாக்கள்.

அப்பாவி இளைஞர்களே! ஆதாரபூர்வமான ஹதீஸை மட்டுமே பின்பற்றுவோம் என்பதில் நீங்கள் உறுதியாக இருந்தால் இப்போதி-ருந்து தொழுகையில் நெஞ்சின் மேலே கைகட்டுவதை விட்டு விடுங்கள்! ஏனென்றால், சிமாக் இடம் பெறும் ஹதீஸ் பக்கா பலவீனமான ஹதீஸ்.

வஹ்ஹாபிய புரோகிதர்களையே பின்பற்று வோம் என்ற நிலையி-ருந்தால் மறுமை வாழ்வு என்னாகும் என்பதை ஒரு கனம் யோசியுங்கள்!

அறிவிப்பாளர் வரிசையில் சிமாக் இடம் பெற்ற ஹதீஸைப் பின்பற்றுவதி-ருந்து பின் வாங்க மாட்டோம், தொழுகையில் நெஞ்சின் மீது கைகட்டுவதை விடமாட்டோம் என்பதில் வஹ்ஹாபி

இளைஞர்களே! நீங்கள் பிடிவாதமாக இருந்தால் இன்றி-ருந்து புதிய முறையில் நீங்கள் கைகட்ட வேண்டும்.

நெஞ்சின் மீது இருகைகளையும் வைக்கக் கூடாது. ஒரேவொரு கை மட்டுமே நீங்கள் வைக்க வேண்டும். காரணம், நெஞ்சின் மீது கைவைப்பதற்கு நீங்கள் ஆதாரமாக எடுத்த அஹ்மதிலே பதிவு செய்யப்பட்ட ஹதீஃதில் ஒரு கை வைப்பதற் குண்டான வார்த்தையே இடம்பெற்றுள்ளது. 'ஹாதிஹீ' என்ற வார்த்தைதான் அது. அதன் பொருள் இந்த(கை) என்பதாகும். ஆகவே, நெஞ்சின்மீது வலது கையை மட்டும் வையுங்கள்! அல்லது இடது கையை மட்டும் வையுங்கள்!

அது எப்படி ஒரு கையை வைப்பது? தொழுகையில் இவ்வாறு செய்வது அழகிய நடமுறை அல்லவே என நீங்கள் கூறினால் அந்த ஹதீஃதை ஆதாரமாகக் கொண்டு நெஞ்சின்மீது கைகட்டுவதை நிறுத்திவிடுங்கள்! அதுதான் நீங்கள் நியாயவாதிகள் என்பதின் அடையாளம்.

அவ்வாறில்லாமல் அந்த ஹதீஃதில் இடம் பெற்ற 'நெஞ்சின்மீது' என்ற வார்த்தையை எடுத்துக்கொள்வோம். 'ஒரு கை' என்பதை விட்டுவிடுவோம் என்ற முடிவுக்கு நீங்கள் வந்தால் வஹ்ஹாபி இளைஞர்களே! உங்களின் சுயநலத்திற்காக ஹதீஃதை சிதைத்த குற்றத்திற்கு உள்ளாகுவீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்!

நேர்வழிகாட்ட அல்லாஹ் போதுமானவன்.

பகிரங்க சவால்

1. குர்ஆனை உளூஇன்றி தொடுதல்
2. நபித் தோழர்களை பின்பற்றுதல்
3. கழாத் தொழுகை
4. இறைவனுக்கு உருவம்
5. ஜகாத் கடமை வருடத்திலா? வாழ்நாளிலா?
6. அத்தஹிய்யாத்தில் விரலசைத்தல்
7. வஸீலா
8. மவ்-த் ஷரீப்
9. மறைமுக ஞானம்
10. மரணித்த பின் உயிருடன் வாழ்தல்
11. இறைவன் அர்ஷில் மட்டுமா?
12. ஜியாரத் - உரூஸ்
13. தொழுகையில் நெஞ்சின்மீது கைகட்டுதல்

போன்ற தலைப்புகளில் குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் விவாதம் செய்ய சுன்னத் வல் ஜமாத்தினரான நாங்கள் தயார்!

வஹ்ஹாபிகளே நீங்கள் தயாரா?

தொடர்புக்கு
சுன்னத் ஜமாஅத் ஐக்கியப் பேரவை
சென்னை-1.
Cell: 93822 22202

பகிரங்க சவால்

1. குர்ஆனை அளுஇன்றி தொடுதல் நபித் தோழர்களை பின்வள்ளுதல்
2. கழாத் தொழுகை
3. இறைவனுக்கு உருவம்
4. ஜகாத் கடமை வருடத்திலா?
5. அத்தஹிய்யாத்தில் விரலசைத்தல்
6. வஸீலா
7. மவ்-த் ஷரீப்
8. மறைமுக ஞானம்
9. மரணித்த பின் உயிருடன் வாழ்ழுதல்
10. இறைவன் அர்ஷில் மட்டுமா?
11. ஜியாரத் - உரூஸ்

போன்ற தலைப்புகளில் குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் விவாதம் செய்ய சுன்னத் வல் ஜமாத் தனரான நாங்கள் தயார்!

வஹ்ஹாபிகள் தயாரா?

தொடர்புக்கு

சுன்னத் ஜமாஅத் ஐக்கியப் பேரவை

சென்னை-1.

Cell: 93822 22202